# சிந்திக்கத்தக்க சிறுகதைகள்

வெளியிடுவோர்

நஸாரத் நஷ்ரோ இஷாஅத் - காதியான்

## மொழிபெயர்ப்பாளர் பற்றி...

A.P.Y. அப்துல் காதர் M.A 1965 முதல் 2004 வரை ஆசிரியராக பணியாற்றியவர். 1978 முதல் 1995 வரை முதுகலை தமிழாசிரியராகவும், 1996 முதல் 2004 வரை தலைமையாசிரியராகவும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

1974 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்தார். மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவராகவும், தமிழ்நாடு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அமீராகவும், தமிழக தென் மண்டல ஜமாஅத்துகளின் அமீராகவும் தொண்டாற்றி வந்தார். தற்போது மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அமீராகவும், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் அமீராகவும் மார்க்கத் தொண்டாற்றி வருகிறார்.

1988–1989 ஆகிய வருடங்களில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக திருக்குர்ஆன் மொழியாக்கத்தை வெளியிடும் குழுவில் ஒருவராக பணியாற்றியவர். 1994–ல் கோவையில் JAQH அமைப்பினரோடு நடைபெற்ற விவாதத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக நடுவராக இருந்து விவாதம் வெற்றி பெற பாடுபட்டவர். இவர் பைபிளின் ஆதாரங்களின் அடிப்படையில் கிறித்துவ கடவுட் கொள்கை என்னும் நூலையும், திருக்குர்ஆன் நபிமொழி ஆகியவற்றின் ஆதாரங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் ஈஸப்னு மர்யம் (அலை) அவர்களின் மரணம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

மேலும், இவர் 'இஸ்லாத்தின் மறு பெயர் அஹ்மதிய்யத்' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் TNTJ –வின் தோற்றுநர் மவ்லவி P. ஜெய்னுல் ஆபிதீன் எழுதிய திருக்குர்ஆன் மொழியாக்கத்திலிருந்தும் அவருடைய பிற நூல்களில் இருந்தும் TNTJ –வின் கருத்துகள் திருக்குர்ஆன், நபிமொழிக்கு எதிரானது என்றும், இஸ்லாத்திற்கு மாறுபட்டது என்றும் ஏறக்குறைய 70 தலைப்புகளில் திருக்குர்ஆன், நபிமொழி சான்றுகள் மூலம் நிரூபித்துள்ளார். இந்நூல் 2013 –ல் வெளி வந்து விட்டது. மூன்று ஆண்டுகள் ஆகியும் TNTJ -யின் எந்தவொரு மவ்லவியாலும் (PJ உட்பட) இந்நூலுக்கு இன்று வரை பதில் எழுத முடியவில்லை. இனிமேலும் பதில் எழுதக் கூடியவர் பிறக்கப் போவதில்லை. இவ்வாறாக TNTJ கூட்டத்தினர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உண்மை என்று தமிழ் உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது 'சிந்தனைக்குரிய சிறுகதைகள்' என்னும் தலைப்பில் ஒரு நூலை மொழிபெயர்த்துள்ளார்கள். இவர் திருக்குர்ஆன், நபிமொழி, பைபிள் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்று மதத்தவருடன் அழகிய முறையில் விவாதம் செய்வதில் ஆற்றல் மிக்கவர். மேடைகளில் மார்க்க சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். இன்னும் அவருடைய தொண்டுகள் தொடர துஆ செய்கிறோம்.

# சிந்திக்கத்தக்க சிறுகதைகள்

உருது மூலம்

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்முத் அஹ்மது (ரலி) அவர்கள்

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் – அல் முஸ்லிஹுல் மவ்வூது

ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழியாக்கம்

ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் M.A.,

நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்
பஞ்சாப் — 143 516

Copyrights Reserved

First Edition : 2016

Copies : 1000

"Sindikkathakka Siru Kathaigal"

*Written by*
Hazrat Mirza Basheeruddin Mahmood Ahmad Ra

*Translated by*
Jb. A.P.Y. ABDUL QADIR M.A.,

*Type-set by*
Muallim Jb. A. Khaleel Ahmad Sb
(Inspector, The Weekly BADR Tamil Edition) &
Jb. A. Abdul Nizar Sb.

*Printed by*
Syed Screens - Tirunelveli - 627 004.

*for*
Nazarat Nashr-o-Isha'at, Qadian,
Gurdaspur Distt, Punjab - 143 516.

ISBN No. :

*Published by*
Book Publishing Committee Tamilnadu
Ashura East Street, Melapalayam,
Tirunelveli - 627 005.
Ph : 0462 - 2352456

Website : www.alislam.org/tamil - www.mta.tv
Tamil Toll Free Number : 1800 425 40000
National Toll free Number : 1800 3010 2131

# முகவுரை

*ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் அசாதாரணமான சொற்பொழிவாற்றும் திறமையை வழங்கி இருந்தான். அவர்களது சொற்பொழிவுகள் எவ்வளவு அழகானவையாகவும், எளிய நடையிலும் இருந்தன என்றால் மிகக் கடுமையான கருத்துக்கள் கூட எளியவையாகவும் புரியக் கூடியவையாகவும் இருந்தன. சாதாரண அறிவு படைத்தவர்களும் கூட அவற்றை நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களது சொற்பொழிவின் போது அவர்கள் சில நகைச்சுவைக் கதைகளையும் துணுக்குகளையும் அல்லது சம்பவங்களையும் எடுத்துக் கூறுவார்கள். அவற்றை கேட்பவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்து அதிலிருந்தும் எத்தகைய சிறந்த விளைவை எடுத்து வைப்பார்கள் என்றால் எந்தக் கருத்தை அவர்கள் கூறி வந்தார்களோ அது ஒவ்வொருவருடைய மூளையிலும் தெளிவாகப் பதிந்து விடும். எல்லா விஷயங்களும் தெளிவாகி உள்ளத்தில் இறங்கி விடும். அவர்களது சொற்பொழிவைக் கேட்பதில் ஒவ்வொருவருக்கும் இருந்த ஆர்வமும் அதில் அவர்கள் திளைத்திருந்த நிலையும் எவ்வாறு இருந்ததென்றால் அவர்களுக்கு முன்னால் இருந்து கேட்கக்கூடிய மக்களுக்கு நேரம் போவதே தெரியாது. அவர்களது சில சொற்பொழிவுகள் எட்டு மணி நேரம் வரை நீடித்திருத்தது. அவ்வாறிருந்தும் கூட அதனைக் கேட்பவர்களின் ரசனையிலும் ஆர்வத்தில் எந்த வித்தியாசமும் வந்ததில்லை. கேட்பவர்கள் அந்த சபையை விட்டு எழுந்து செல்லும் போது அவர்களது மூளை அறிவுகளின் பொக்கிஷங்களால் நிறைந்திருக்கும்.*

*இந்தப் புத்தகத்திலும் கூட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்களின் சில சொற்பொழிவுகளில் கூறப்பட்டிருந்த வரலாற்றுச் சம்பவங்கள் மற்றும் நகைச்சுவைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலமாக அன்னார் நல்லொழுக்க மற்றும் சீர்திருத்தப் படிப்பினைகளைத் தந்துள்ளார்கள். அவை இந்த நூலில் ஒன்று திரட்டப்பட்டுள்ளன. அவை சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளத்தை ஈர்க்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. இதற்காக மிகவும் உழைத்தும் சிரத்தை எடுத்துக் கொண்டும் இந்த நூலை தொகுத்த மதிப்பிற்குரிய மலிக் அதாவுல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு தலைமையக மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா நன்றி தெரிவிக்கின்றது.*

*இந்த நூலை 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் பதிப்பாக இந்திய லஜ்னா இமாயில்லாஹ் வெளியிட்டது. அது தற்போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜஸாஹுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா.*

**- வெளியீட்டாளர்**

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தில்லி இன்னும் தூரத்தில் இருக்கின்றது | 9 |
| 2. | நன்மதிப்பு | 10 |
| 3. | விவாதம் | 12 |
| 4. | ஒரு மூதாட்டியின் விருப்பம் | 13 |
| 5. | கதவைத் தட்டுதல் | 15 |
| 6. | துணிவு | 19 |
| 7. | கௌரவ ஆடை | 21 |
| 8. | வாயிற் காவலன் | 26 |
| 9. | பன்றிக் குட்டியின் சாவு | 30 |
| 10. | அன்புடையோருக்கு ஏற்படும் வலி | 33 |
| 11. | பெருநாள் | 35 |
| 12. | அன்பளிப்பு | 37 |
| 13. | தியாகம் | 39 |
| 14. | புகழ் | 42 |
| 15. | நைந்து கிழிந்த தொப்பி | 44 |
| 16. | இளவரசன் | 47 |
| 17. | வயோலின் - நரப்பிசை கருவி | 51 |
| 18. | நோன்பு | 53 |
| 19. | ஜெர்மனி மொழி சொற்பொழிவு | 55 |
| 20. | சோம்பேறிகள் | 56 |
| 21. | மாவரைக்கும் கல் | 58 |
| 22. | ஞானம் | 63 |


## வேண்டுகோள்

இந்த நூல் சிறுவர்களுக்கு மட்டுமல்ல. ஜமாஅத்தின் சகோதர சகோதரிகளும் படிக்க வேண்டிய ஒரு நூலாகும். காரணம், இந்த நூலிலுள்ள சிறுகதைகள் முகவுரையில் கூறியபடி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தன்னுடைய நூல்களிலும், சொற்பொழிவுகளிலும் எடுத்துக் கூறிய சம்பவங்களாகும். அதன் தனிச்சிறப்பு என்னவென்றால், அக்கதைகளின் ஆரம்பத்திலோ அல்லது முடிவிலோ கருத்துள்ள ஒரு படிப்பினையை அன்னார் கூறியுள்ளார்கள். இதனைப் படித்து நம் வாழ்வில் அதனைப் பின்பிற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

மேலும், இதுபோன்ற நூல்கள் தமிழ் மொழியில் நிறைய வெளி வருவதற்கு ஜமாஅத்தின் சகோதர, சகோதரிகள் எல்லா வகையிலும் உதவி செய்ய முன் வர வேண்டும். அதற்கு இறைவன் அருள் புரிவானாக! ஆமீன்.

– மொழிபெயர்ப்பாளர்

## இந்த மொழிபெயர்ப்பு நூல் பற்றி...

*ஜமாஅத்தின் சிறுவர், சிறுமியரும், சகோதர, சகோதரிகளும் படித்து படிப்பினை பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், இதுபோன்ற நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கம் அவர்களிடையே உருவாக வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் இந்த நூல் வெளியிடப்படுகிறது.*

*இந்த சிறுகதை நூல் வெளிவருவதற்கு மூல காரணமாக இருந்தவர் கோயம்புத்தூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய ரியாஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் ஆவார்கள். சிறுவர்களுக்காக ஒரு சிறுகதை நூல் எழுத வேண்டும் என்று எனக்கு ஆர்வமூட்டி அதற்குரிய பொருள் தியாகத்தையும் செய்து உதவினார்கள்.*

*Points to Ponder (சிந்தனைக்குரிய சிறுகதைகள்) என்ற ஆங்கில நூலை alislam website -லிருந்து எனக்கு எடுத்துத் தந்தவர் சகோதரர் ஜனாப் A. நாஸிர் அஹ்மது சாஹிப் M.E. அவர்கள் ஆவார்கள். உருது மொழியிலிருந்து மூல நூலை எனக்குத் தந்து உதவியர் மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்கள் ஆவார்கள்.*

*ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த தமிழாக்கத்தை மூல நூலாகிய உருதுவிலிருந்து ஒப்பிட்டு சரி பார்த்து தேவையான திருத்தங்களை செய்து தந்தவர்கள் மவ்லவி M.ரஃபீக் அஹ்மது சாஹிப், மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப், மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் ஆவார்கள்.*

*இந்த நூலை அழகிய முறையில் தமிழில் Type-set செய்து தந்தவர்கள் மவ்லவி A. கலீல் அஹ்மது சாஹிப் மற்றும் A. அப்துல் நிஸார் சாஹிப் ஆவார்கள்.*

*மேலும், இந்த நூல் வெளி வருவதற்கு நாஸிர் நஷ்ரோ இஷாஅத் மவ்லவி ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் அவர்கள் மனமுவந்து அனுமதியை வழங்கியயுள்ளார்கள்.*

*இந்த நூல் வெளிவருதற்கு உதவிய இவர்களுக்கும் மேலும் முழுமையான ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் இறைவன் நற்கூலியை வழங்குவானாக! ஆமீன்.*

## 1. தில்லி இன்னும் தொலைவில் இருக்கிறது

***எவர்களுக்கு இறைவன் கிடைத்து விடுகின்றானோ அவர்களுக்கு மன்னர்கள் ஒரு பொருட்டில்லை. நபிமார்கள் நிலையோ வேறுபட்டது. நபிமார்களின் பணியாட்களும் அடிமைகளும் அடைந்த தகுதிக்கு முன்னால் அரசர்கள் ஒரு பொருட்டேயில்லை.***

நிஜாமுத்தீன் வலியுல்லாஹ், தில்லியிலுள்ள ஒரு சான்றோர் ஆவார். அவர் பல வலிமார்களுக்கு ஆன்மீக குருவாக இருந்தார். அவர் மூலம் நேர்வழி இந்தியா நெடுகிலும் பரவியது. அச்சமயம் துக்ளக்கின் குடும்பத்தில் வந்த ஒரு மன்னர் இந்தியாவை ஆண்டு வந்தார். நிஜாமுத்தீன் அவுலியா கூறிய ஒரு விஷயத்தால் மன்னர் கோபமுற்றார். அரசர் பயணத்தில் இருந்தார். எனவே பயணத்தில் இருந்து திரும்பியதும் நிஜாமுத்தீன் வலியுல்லாஹ்வை தண்டிப்பதாகக் கூறினார். இச்செய்தி, சீடர்களுக்கு தெரிய வந்ததும் அவர்கள் கவலையுற்றனர். அரசர் தில்லிக்குத் திரும்புகிறார் என்றறிந்து அவர்களின் கவலை மேலும் அதிகரித்தது.

சீடர்கள் அவரிடம், அரசர் வந்து கொண்டிருக்கிறார். எனவே, தில்லி வந்தடைவதற்கு முன் ஏதேனும் சமாதானத்திற்கான முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினர். அதற்கு நிஜாமுத்தீன் வலியுல்லாஹ், நாம் என்ன செய்வது? எல்லாம் இறைவன் கையில் இருக்கிறது. அவன் நாடுவதை செய்யட்டும் என்று கூறி விட்டார். அரசர் இன்னும் அருகில் வந்து விட சீடர்கள் மேலும் கவலை அடைந்தனர். சீடர்கள் இன்னும் கொஞ்சம் தூரம் தான் இருக்கிறது என்று அவரிடம் கூறினர். அவர் அதற்கு கவலைப்படாதீர்கள். தில்லி இன்னும் தூரத்தில் இருக்கிறது என்று பதில் கூறினார்.

கடைசியில், அரசர் தில்லிக்கு மிக அருகில் வந்து விட்டார். முஸ்லிம் அரசர்களுக்கு ஒரு வழக்கம் உண்டு. அவர்கள் இரவில் நகருக்குள் நுழைவதில்லை. உண்மையில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நடைமுறையும் இதுவேயாகும். அரசர்களும் அதன்படி செயல்பட்டனர். எனவே இரவில் நகருக்கு அருகில் அரசர் வந்ததும் நகருக்கு வெளியே அவர் இரவில் தங்கினார். அரசர் நாளை நகருக்குள் நுழைவார் என்று அறிவிக்கப்பட்டது.



சீடர்கள் மீண்டும் அரசர் நகருக்குள் வர இருக்கிறார் என்று கூறினர். அதற்கு நிஜாமுத்தீன் வலியுல்லாஹ், தில்லி இன்னும் தூரத்தில் இருக்கிறது என்று மீண்டும் அதே பதிலையே கூறினார். காலைப் பொழுது விடிந்நதும் அவர்கள் மீது கலப்பற்ற பேரன்பு வைத்திருந்த சீடர்கள், இப்போது அரசர் நகரத்திற்குள் நுழைவார். மேலும் என்ன துன்பம் வந்து விடுமோ என்று தெரியவில்லையே என கடுமையாக அஞ்சினர். ஆனால் அரசர் ஏதோவொரு விபத்தில் திடீரென இறந்து விட்டார். மேலும் அவருக்கு பகரமாக அவரது சடலமே நகருக்குள் நுழையும் என்ற செய்தி கிடைத்தது.

***எனவே, அல்லாஹ்வுக்காக எந்த மனிதர் ஆகி விடுகின்றாரோ அவருக்கு எதிரில் அரசர்களும் அற்பமானவர்கள் ஆவர். ஏனென்றால் எவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்குமோ அவர்களுக்கு மட்டுமே உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும்.***

## 2. நன்மதிப்பு

எனக்கு ஞாபகம் இருக்கிறது. எங்களுடைய ஒரு களிமண் வீடு இருந்தது. சிறு வயதில் சில வேளைகளில் விளையாடுவதற்காக நாங்கள் அதன் மீது ஏறுவதுண்டு. அதில் ஏறுவதற்காக மர்ஹூம் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள ஏணிப்படிகள் வழியாக எங்களுக்கு ஏற வேண்டியது வந்தது. அச்சமயம் – பின்னர்

அஹ்மதியான எங்களுடைய பெரியம்மா அவர் என்னைப் பார்த்து பஞ்சாபியில் ஜேஹோ ஜியா கான் ஒஹோ ஜி கோ கோ என்று கூறி வந்தார்கள். எனது தாயார் இந்தியர் ஆவார். அதன் காரணமாக சிறு வயதில் இந்த பஞ்சாபிய சொற்றொடரின் பொருளை புரிந்து கொள்ளும் வகையில் எனக்கு அதிக அறிவு இருந்ததில்லை. ஒரு முறை நான் என்னுடைய தாயாரிடம் இதனுடைய பொருள் என்ன என்று வினவிய போது இதன் பொருள் காக்கையை போன்று தான் அதன் குஞ்சுகளும் இருக்கும். காக்கை என்பதன் பொருள் நவூதுபில்லாஹ் உங்களுடைய தந்தை ஆவார்கள். அதன் குஞ்சு என்பதன் பொருள் நீங்கள் ஆவீர்கள் என்று கூறினார்கள். பிறகு நான் இன்னொரு காலத்தையும் கண்டேன். அதே பெரியம்மா வீட்டிற்கு நான் செல்லும் போதெல்லாம் அவர்கள் என்னுடன் மிக்க மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். நான் உட்கார மெத்தை விரித்து மரியாதையுடன் அமரச் செய்து என்னை மதிப்புடன் நடத்துவார்கள். அதற்கு நான் நீங்கள் மிகப் பலவீனமாகவும், நலிந்தும் இருப்பதால் அங்குமிங்கும் அலைந்து கஷ்டப்படாதீர்கள் என்று கூறுவேன். அதற்கு அவர் நீங்கள் என் குரு ஆவீர்கள் என்று பதில் கூறினார்.

இவ்வாறு நான் காக்கை குஞ்சாக இருந்த காலத்தையும் கண்டேன். நான் ஒரு ஆன்மீக குருவாக மாறிய காலத்தையும் கண்டேன். இவற்றை எல்லாம் காண்கிறபோது இறைவன் உலகை மாற்ற விரும்பும் போது எவ்வாறு மாற்றுகிறான் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

***எனவே, உங்களுக்குள் மாற்றங்களை கொண்டு வாருங்கள். உங்களை இறைவனின் அன்பிற்குரியவர்களாக ஆக்கக்கூடிய மாற்றத்தை உருவாக்குங்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் அடியார்களின் அணியில் நுழைந்து விடுவீர்களாக!***



## ३. விவாதம்

ஹஸ்ரத் (ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் சாஹிப்) கூறி வருவார்கள். அன்னாருக்கு மவ்லவி ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் என்ற ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் பின்னர் மதீனா சென்று விட்டார். மிகவும் நல்லவர். மேலும் சான்றோராகவும் இருந்தார். ஆனால் கிறித்தவ மார்க்கத்தைப் பற்றி முற்றிலும் அறியாதவராக இருந்தார். ஒருமுறை அவருக்கு கிறித்தவர்களோடு ஒரு விவாதத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களின் எதிர் தரப்பிலிருந்த பாதிரியார் மிகவும் தந்திரமும், அறிவும் படைத்தவராக இருந்தார். ஆனால் இவரோ குர்ஆன் மற்றும் ஹதீஸையே அறிந்திருந்தார். மேலும் மதி நுட்பமும், புரிதிறனும் கொண்டவராக இருந்ததனால் நான் குர்ஆன் மற்றும் ஹதீஸை எடுத்து வைத்தால் இவற்றின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி விடுவார். எனவே, ஆதாரம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்றால் அதை அவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் எனக்கோ அது பற்றி தெரியாது என்று எண்ணி இறுதியில் மக்களிடம் என்ன கேட்பது? வாருங்கள். இறைவனிடம் துஆ செய்வோம் என்று கூறினார்.

எனவே அவர்கள் துஆ செய்தனர். ஏறக்குறைய இரவு 11.00 மணிக்கு அவர்களினுடைய வீட்டுக் கதவை எவரோ தட்டினார். அவர் கதவைத் திறந்த போது ஜிப்பா அணிந்த ஒருவர் உள்ளே நுழைந்து காலையில் உங்களுக்கு இன்ன பாதிரியாருடன் விவாதம் இருக்கிறது. நானும் ஒரு பாதிரியே ஆவேன். ஆனால் ஏகத்துவத்தின் விவகாரத்தில் நீங்கள் உண்மையில் இருப்பதாக நான் கருதுகிறேன். எனவே நான் உங்களுக்கு ஒரு சில ஆதாரங்களை குறிப்பெடுத்துக் கொள்வதற்காக கூற விரும்புகிறேன். ஏனென்றால் அந்த ஆதாரங்கள் பற்றி நீங்கள்

அறியாதவராக இருக்கலாம் என்று கூறினார். இவ்வாறு, அவர் அனைத்து ஆதாரங்களையும் எழுதச் செய்தார். காலையில் விவாதம் நடந்த போது இவருக்கோ எந்தவொரு ஆதாரங்களும் தெரியாமல் இருந்தது. இப்பொழுது இவருக்கு என்ன ஆயிற்று? சில வேளைகளில் கிரேக்க நூல்களிலிருந்து ஆதாரங்களை வழங்குகின்றார். சில சமயம் ஹீப்ரு புத்தகங்களிலிருந்து ஆதாரங்களை படிக்கின்றார். சில சமயம் ஆங்கில புத்தகங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்து வைக்கிறார் என்றால் சில வேளை பைபிளிலிருந்து ஏகத்துவத்தின் போதனையை கூறுகின்றார் என்பதைக் கண்டு அந்த பாதிரி மிகவும் வியப்பிற்குள்ளானார்.

சுருக்கமாக, மவ்லவி ரஹ்மதுல்லாஹ் சாஹிப் அவர்கள் சிறந்த முறையில் விவாதம் செய்தார்கள். மேலும் பாதிரியார் படுதோல்வி அடைந்தார். இதே போன்று பாதிரி தினமும் இரவில் வந்து ஆதாரங்களை எழுத வைத்தார். மேலும் காலையில் மவ்லவி சாஹிப் அவற்றை வலுவாக எடுத்து வைத்தார்கள்.

***ஒரு மனிதர் நற்செயல் செய்தவற்காக எழும்போது அல்லாஹ் தாமாகவே அவர்களை உண்மைப்படுத்து வதற்கும் அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் மக்களின் உள்ளத்தில் தூண்டுதலை ஏற்படுத்துகின்றான்.***

## 4. மூதாட்டியின் விருப்பம்

***திருக்குர்ஆன் மிகப்பெரும் செல்வமாகும். ஒருவருடைய வீடு அந்த செல்வம் இல்லாமல் இருப்பதை எந்தவொரு உண்மையான முஸ்லிமும் எவ்வாறு விரும்ப முடியும்?***

ஹஸ்ரத் (ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் சாஹிப்) கூறி வந்தார்கள். ஒரு மூதாட்டி இருந்தார்கள். அவர் மிகவும் நல்லவர்.



நான் அவ்வப்போது அவர்களிடம் சென்று வந்தேன். ஒரு முறை நான் அவர்களிடம், தாயே! உங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதென்றால் என்னிடம் கூறுங்கள். நான் அந்த பொருளை உங்களுக்கு வாங்கித் தர தயாராக இருக்கிறேன் என்று கேட்டார்கள். அதற்கு அவள், மகனே ! நான் மிகவும் நிம்மதியாக இருக்கிறேன். எந்த பொருளின் தேவையும் இல்லை என்றாள். நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினேன். ஏதாவது கூறுங்கள் என்றேன். ஆனால் அந்த மூதாட்டியோ ஒவ்வொரு முறையும் நான் திருப்தியாக இருக்கிறேன். எல்லா வகையான மகிழ்ச்சியும் இருக்கிறது. எவ்விதமான கஷ்டமும் இல்லை என்று கூறினாள். மேலும் நானும் என் மகனும் தான் இருக்கிறோம். அல்லாஹ் எங்களுக்கு காலையிலும் மாலையிலும் இரு ரொட்டிகளை தருகின்றான். ஒரு ரொட்டியை நானும் இன்னொன்றை என் மகனும் சாப்பிடுகின்றோம். பிறகு ஒரு கட்டிலில் ஒன்றாகவே உறங்குகிறோம். ஏனென்றால் எங்களிடம் ஒரேயொரு போர்வை மட்டுமே உள்ளது. என் பக்கம் குளிர்ந்து விட்டால், மகனே! திரும்பிப் படு என்று நான் கூறுவேன். அவனும் திரும்பிப் படுப்பான். அதனால் அந்தப் பக்கம் சூடாகி விடும். பிறகு கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவனுடைய பக்கம் குளிர்ந்து விட்டால் அவன் என்னிடம், தாயே! நீ திரும்பிக் கொள் என்பான். நானும் திரும்பிக் கொள்வேன். இவ்வாறு அவனுக்கு நிம்மதி ஏற்படுகின்றது. எனவே எங்களுக்கு எதுவும் தேவையில்லை எனக் கூறினாள்.

அன்னார் (ரலி) கூறி வந்தார்கள். நான் மீண்டும் வலியுறுத்தினேன். மேலும் ஏதேனும் தேவை இருந்தால் கூறுங்கள் என்றேன். இறுதியில் நான் அதிகம் வலியுறுத்தியதன் காரணமாக நீங்கள் கண்டிப்பாக ஏதாவது கொடுக்க வேண்டும் என்றால் என்னுடைய பார்வை இப்பொழுது முதுமையின் காரணமாக பலகீனமாகி விட்டது. மேலும் என்னிடமிருந்த

திருக்குர்ஆனை இப்போது என்னால் நல்ல முறையில் படிக்க முடியவில்லை. ஏனென்றால் அதன் எழுத்துக்கள் மிகவும் சிறிய எழுத்துகளை கொண்டிருக்கிறது. நீங்கள் எனக்கு ஏதேனும் வழங்க வேண்டுமென்றால் பெரிய எழுத்துக்களுடைய திருக்குர்ஆனை கொண்டு வந்து தந்தால் என்னால் அதை எளிதாக படிக்க முடியும் என்று கூறினாள். இது மட்டுமே என்னுடைய விருப்பமாகும் என்று கூறினாள்.

உண்மை என்னவென்றால் ஒரு நம்பிக்கையாளருக்கு எல்லாவற்றிலும் மேலான அருள் திருக்குர்ஆனே ஆகும்.

## 5. கதவைத் தட்டுதல்

***உண்மையான விசுவாசியின் அடையாளம் என்னவென்றால் அவன் தன்னுடைய நண்பர் மற்றும் அன்பிற்குரியவர்களுக்கு தன்னுடைய எல்லா பொருள் களையும் தியாகம் செய்வதற்கு தயாராகி விடுகின்றான். அவ்வாறிருக்க, அப்படிப்பட்ட அன்பிற்குரியவன் மற்றும் உள்ளம் கவர்ந்தவன் அவர் அன்பிற்குரியவனாகவும் உள்ளம் கவர்ந்தவனாகவும் மட்டுமின்றி மனிதனை படைத்தவனாகவும், எஜமானனாகவும் இருந்தால் எப்படி இருக்கும்? என்பதை எண்ணிப் பாருங்கள்.***

ஒரு புகழ்பெற்ற கதை உள்ளது. ஓர் இளைஞர் தன்னுடைய தந்தையின் சொத்துக்களை நண்பர்களோடு சேர்ந்து வீணாக்கும் பழக்கமுடையவனாக இருந்தான். எல்லா நேரமும் அவனைச் சுற்றி அவன் புகழ்பாடும் கூட்டம் இருந்தது. மேலும் அவன் இரவு பகலாக செல்வத்தை அழித்து வந்தான். அவனுடைய தந்தை, இவர்கள் புகழ்பாடுபவர்கள் மற்றும் சுயநலமுடைய இளைஞர்கள் ஆவர். அவர்களுக்கு உன்மீது உண்மையான நேசம் இல்லை. நீ அவர்களுக்காக உன்னுடைய



செல்வத்தை வீணாக்காதே என்று எப்போதும் அறிவுரை கூறி வந்தார். ஆனால், அவன் தன்னுடைய தந்தையின் அறிவுரையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் இவர்கள் என்னுடைய உண்மையான நண்பர்கள் ஆவர் என்று பதில் கூறினான். உனக்கு இத்தனை நண்பர்கள் எங்கிருந்து கிடைத்தார்கள். எனக்கு முழு வாழ்நாளிலும் ஒரேயொரு நண்பன் தான் கிடைத்துள்ளான். மேலும் உன்னுடைய நிலைமை என்னவென்றால் உன்னைச்சுற்றி எப்போதும் நண்பர்களின் ஒரு கூட்டம் இருக்கிறதே என்று தந்தை கூறினார்.

ஒரு நீண்ட காலம் கழிந்தது. மேலும் தந்தையின் அறிவுரையை அவன் ஏற்காததினால் ஒரு நாள் தந்தை அவனிடம் நான் கூறுவதில் உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் அதை தெரிந்து கொள்வதற்காக உன்னுடைய நண்பர்களை பரிசோதித்துப் பார். பிறகு உனக்கு தாமாகவே உண்மையான நண்பர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பது தெரிய வரும் என்று கூறினார். அதற்கு அவன், நான் என்னுடைய நண்பர்களை எவ்வாறு சோதிப்பது என கேட்டான். தந்தை கூறினார். நீ ஒவ்வொரு நண்பனின் வீட்டிற்கும் செல். மேலும் என்னுடைய தந்தை என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார். மேலும் சொத்துக்களில் இருந்த உரிமையை பறித்து விட்டார். எனக்கு இப்பொழுது வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக கொஞ்சம் ரூபாய் தாருங்கள் என்று கேள் என்று கூறினார். அவன் தன்னுடைய நண்பர்களின் வீடுகளுக்கு சென்றான். மேலும் அவனை அவனுடைய தந்தை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார் என்பது அவர்களுக்கு தெரிய வந்த போது ஒருவரோ உள்ளிருந்து கொண்டே நான் நோயாளியாக இருக்கின்றேன். இப்போது சந்திக்க முடியாததற்கு வருந்துகிறேன் என்றும் இன்னொருவரோ தன்னுடைய பணியாள் மூலமாக நான்

வீட்டில் இல்லையென்றும் கூறினார். இன்னொருவர் பணம் இருந்தது. ஆனால் இன்று தான் இன்ன நபருக்கு வழங்கி விட்டேன் என்று கூறி மன்னிப்பு கோரினார். இவ்வாறு அவன் வெறும் கையுடன் தன்னுடைய தந்தையிடம் திரும்பிச் சென்று நீங்கள் கூறியது உண்மை என்று நிரூபணமாகி விட்டது. ஒருவரும் எனக்கு உதவி செய்யவில்லை என்று கூறினான்.

தந்தை இப்பொழுது வா. நான் உனக்கு என்னுடைய நண்பரை காண்பிக்கிறேன் என்று கூறியவாறு அவனை தன்னுடன் நகரத்திற்கு வெளியே காட்டின் பக்கம் அழைத்துச் சென்றார். மேலும் ஒரு வீட்டை அடைந்து அவர் குரல் கொடுத்த போது உள்ளே இருந்து யார் என்ற குரல் வந்தது. அதற்கு அவர் நான் இன்ன நபராவேன் என்று தனது பெயரை கூறினார். அதற்கு மிக நன்று! என்று கூறிய பிறகு அமைதியாகி விட்டது. மேலும் அரை மணி நேரம் வரை உள்ளே இருந்து வேறு எந்த பதிலும் வரவில்லை. உங்களுடைய நண்பரும் என்னுடைய நண்பர்களைப் போன்றவர்களே என்று நிரூபணமாகி விட்டது என மகன் கூறினான். அதற்கு, அஞ்ச வேண்டாம். ஏன் அவர் வெளியே வருவதற்கு இவ்வளவு தாமதம் ஆகிறது என்பது தெரிய வந்து விடும் என்று தந்தை கூறினார்.

சில நிமிடங்கள் கழிந்த பிறகு அந்த மனிதர் வெளியே வந்தார். அவர் தனது ஒரு கையில் தன்னுடைய மனைவியின் கையை பிடித்திருந்தார். அவரது இடுப்பில் உறை ஒன்று கட்டப்பட்டிருந்தது. மேலும் மற்றொரு கையில் வாள் இருந்தது. அவர் வெளியே வந்து, என் நண்பரே ! மன்னித்துக் கொள். இன்று தாங்கள் நடு இரவு வேளையில் வந்துள்ளீர்கள். தாங்கள் கதவைத் தட்டிய போது இந்த நடு இரவு வேளையில் தாங்கள் என்னிடம் வருவதற்கு கண்டிப்பாக ஏதோவொரு காரணம்



இருக்கும். மேலும் இப்பொழுது தாங்களுக்கு ஏதேனும் இன்னல் ஏற்பட்டிருக்கலாம். உதவிக்காக நீங்கள் என்னிடம் வந்துள்ளீர்கள் என்று நான் நினைத்து வாளை எடுத்து வந்தேன். ஏனென்றால் உங்களுக்கு உதவி செய்வதற்கு இதுவொன்று மட்டும் தான் இருந்தது. பிறகு தாங்களோ கோடீஸ்வரர் ஆவீர்கள். ஆனால் சில வேளைகளில் கோடீஸ்வரர்களுக்கும் கூட எத்தகைய துன்பம் வருகிறதென்றால் அவர்கள் ஓரிரு பைசாக்களுக்கு கூட தேவையுடையவர்களாக ஆகி விடுகின்றனர் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நான் முழு வாழ்நாளும் ஒவ்வொரு பைசாவாக 400, 500 ரூபாய் என்று சேர்த்து அதை நிலத்திற்கு அடியில் புதைத்து வைத்திருந்தேன். இந்த எண்ணம் வந்ததினால் நான் நிலத்தை தோண்டி பையை வெளியே எடுத்தேன். இதன் காரணமாக வருவதில் இன்னும் தாமதமானது. அதற்குப் பிறகு உங்களுடைய வீட்டிலுள்ளவர்கள் நோய்வாய்ப் –பட்டிருக்கக் கூடும் என்று கருதி அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்காக யாருடைய தேவையும் இருக்கலாம் என்று எண்ணி நான் என்னுடைய மனைவியை எழுப்பி அவளையும் என்னோடு அழைத்து வந்தேன். இப்பொழுது இந்த மூன்றும் இருக்கின்றன. இவற்றில் உங்களுக்கு என்ன உதவி தேவை இருக்கின்றது? என்று கூறுங்கள் என்றார். தந்தை மகனிடம், பார்த்தாயா? இப்படிப்பட்டவர்களே நண்பர்கள் ஆவார்கள் என்றார்.

***இந்த உதாரணம், ஒரு மனிதனுடைய நண்பனே இப்படி இருப்பான் என்றால் இறைவனின் நண்பன் எப்படி இருக்க வேண்டும்? என்ற ஒரு படிப்பினையை தன்னுள் கொண்டுள்ளது.***

## 6. துணிவு

நான் இக்கதையை நினைவு கூரும்போதெல்லாம் எனக்கு இன்பம் கிடைக்கிறது. ஒரு முறை துருக்கியருக்கும் கிரேக்கர்களுக்கும் இடையே போர் நடந்தது. கிரேக்கர்களின் ஒரே கோட்டை மலை உச்சியில் இருந்தது. துருக்கியர்கள் அதை விரைவில் வெற்றி கொள்ள முடியாது என்று ஐரோப்பியர்கள் கருதினர். எனவே இத்தருணத்தில் நாம் இவர்களுக்கிடையில் சமாதானம் செய்யலாம் என்று எண்ணினர். பொதுவாக துருக்கிய சேனாதிபதிகள் நம்பிக்கை துரோகிகளாக இருந்தனர். ஆனால் சிலர் உயர் தகுதி உள்ளவர்களாகவும் இருந்தனர். தனது நாடு மற்றும் சமுதாயத்தின் கண்ணியத்தைப் பற்றிய உணர்வு கொண்ட ஒரு சேனாதிபதி தனக்கு கீழுள்ள படைத் தளபதிகளை ஒன்று திரட்டினார். அவர்களுக்கிடையே சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் கோழைத்தனத்தைப் பற்றிய வெறுப்பை ஊட்டினார். அவப்பெயருடன் உயிர் வாழ்வதை விட நற்பெயருடன் மரணிப்பதின் சிறப்பை நிரூபித்தார். பிறகு வலுவாக தாக்குதல் நடத்தினார். அவர்கள் கீழே இருந்து மேலே ஏறி செல்ல வேண்டியது இருந்ததினாலும் எதிரிகள் அவர்கள் தலைக்கு மேல் இருந்ததினாலும் எதிரிகள் அவர்களுக்கு எளிதாக இழப்பை ஏற்படுத்த முடிந்தது. துருக்கியர்கள் தன் எதிரிகளுக்கு அதிக இழப்பை ஏற்படுத்த முடியவில்லை. துருக்கியர்கள் பலமுறை தாக்குதல் நடத்தினர். ஆனால் அவர்களால் மேலே ஏறி செல்ல முடியவில்லை. இறுதியில் அந்த தளபதியை ஒரு குண்டு தாக்கியது. குண்டு தாக்கியதால் அவர் கீழே விழுந்தார். எதிரிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஏனென்றால் இப்போது துருக்கியர்கள் தோல்வியடைந்து விடுவார்கள் என்று அவர்கள் கருதினர். ஆனால் உண்மையில் தளபதியின் மீது குண்டு பாய்ந்தது துருக்கியர்களின் தோல்விற்கான அடையாளம் அல்ல.



மாறாக, அதில் தான் அவர்களுடைய வெற்றி அடங்கி இருந்தது. தளபதி கீழே விழுந்ததும் அவரது காயங்களுக்கு மருந்து இட்டு கட்டு போடுவதற்கு மக்கள் அவரை தூக்கிக் கொண்டு தனி இடத்திற்கு சென்றனர். அந்த தளபதிக்கு கீழ் இருந்தவர்கள் அவர் மீது அதிக நேசம் வைத்திருந்தார்கள். அவரும் அவர்களை அதிகம் நேசித்தார். அவர் அவர்களை நோக்கி இறைவன் மீது ஆணையாக! உங்களுக்கு என்மீது நேசம் இருக்கிறதென்றால் எனது உடலை தொட வேண்டாம். எனது இந்த இறுதி நொடிகளில் என்னிடம் நீங்கள் அன்பை வெளிப்படுத்த விரும்பினால் அதற்குரிய ஒரே வழிமுறையாவது எனது கல்லறையை கோட்டையில் கட்டுவதாகும். இதனை நீங்கள் செய்ய முடியவில்லையென்றால் என்னை இங்கேயே விட்டு விடுங்கள். என் சடலத்தை காக்கைகளும், நாய்களும் தின்னட்டும் என்று கூறினார்.

தளபதியின் இந்த கூற்று படை வீரர்களை பைத்தியக் –காரர்களாக ஆக்கி விட்டது. அவர்கள் அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டனர். பிறகு எந்தளவு வலுவாக தாக்குதல் நடத்தினர் என்றால் அதில் அவர்கள் மெய்மறந்து விட்டனர். துருக்கியர்கள் கிரேக்கர்களின் கோட்டையை வெற்றி கொண்டனர் என்ற செய்தி வெளி வந்ததும் ஐரோப்பியர்கள் வியப்படைந்தனர்.

இவ்வாறே ஒரு பெண் பற்றிய கதையை ஆங்கில நூல்களில் மாணவர்கள் படித்திருப்பர். ஒரு பெண்ணின் குழந்தையை கழுகு தூக்கிக் கொண்டு மலை உச்சிக்கு கொண்டு சென்றது. அந்த பெண் அக்கழுகுக்கு பின்னால் சென்றாள். மலை மீது ஏறி கழுகின் கூட்டை அடைந்தாள். கூட்டிலிருந்து குழந்தையை எடுத்துக் கொண்டு அவள் தன் குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மகிழ்ந்த போது தான் அவளுக்கு உணர்வு வந்தது. பிறகு அவளுக்கு

மலையிலிருந்து கீழே இறங்குவது கடினமாகி விட்டது. மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு அவளை கீழே இறக்கினர். நீ ஏன் மேலே ஏறினாய்? என்று அவளிடம் கேட்டனர். அதற்கு, நான் எவ்வாறு ஏறினேன் என்று எனக்குத் தெரியாது. எனது குழந்தையை கழுகு அங்கே கொண்டு சென்றது மட்டுமே எனக்குத் தெரியும். அங்கே நானும் சென்று கொண்டிருந்தேன். வலிமைமிக்க ஆண்கள் கூட செய்ய முடியாத அந்த பணியை அந்த குழந்தையை தேடுவதில் அந்த பெண் செய்துள்ளாள் என்பதை பாருங்கள்.

***அந்த பெண்ணுக்கு தன் குழந்தையிடமும் அல்லது துருக்கிய படை வீரர்களுக்கு அந்த தளபதியிடமும் இருந்த அன்பை விட அதிகமான அன்பு இறைவனின் மார்க்கத்தின் மீது உங்களுக்கு இருக்க வேண்டாமா? என்பதை நீங்களே கூறுங்கள்...... இறைவன், ரஸுல் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்தின் உடல் குற்றச்சாட்டுகளின் காயங்களுக்கு இலக்காகி உள்ளது. நீங்களோ நிம்மதியாக அமர்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்களால் இக்காட்சியை சகித்துக் கொள்ள முடிகிறதா?***

## 7. கௌரவ ஆடை

இதுவொரு புகழ்பெற்ற வரலாற்று சம்பவம் ஆகும். ஷிபிலி என்ற பெரிய சான்றோர் ஒருவர் இருந்தார். அவர் செல்வம் படைத்த குடும்பத்தை சார்ந்தவராக இருந்தார். மேலும் அவர் பாக்தாத் மன்னரின் ஆளுநராகவும் இருந்தார். அவர் ஏதோ ஒரு பணி தொடர்பாக அரசரோடு கலந்து ஆலோசிப்பதற்காக தனது மாநிலத்திலிருந்து தலைநகருக்கு வந்திருந்தார். அதே நாட்களில் பல்வேறு படைகளை தோற்கடித்த ஒரு எதிரியோடு போரிடுவதற்காக ஈரானை நோக்கி ஒரு முதன்மையான பெரும் படைத் தலைவர் அனுப்பப்பட்டார். அந்த படைத் தலைவர் எதிரியை தோற்கடித்து அந்த நாட்டை மீண்டும் தன் அரசிற்கு



கீழ் கொண்டு வந்தார். அவர் திரும்பி வந்த போது பாக்தாத்தில் அவருக்கு ஒரு பெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. அரசரும் அவருக்கு பரிசு வழங்குவதற்காக ஒரு சிறப்பான அரசவையை கூட்டினார். மேலும் படைத் தலைவரின் அரிய செயலுக்காக ஒரு கௌரவ ஆடையை அணிவிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் துரதிஷ்டவசமாக பயணத்திலிருந்து வரும் போது அவருக்கு ஜலதோஷம் ஏற்பட்டு விட்டது.

மேலும் துரதிஷ்டவசமாக வீட்டிலிருந்து வரும் போது கைக்குட்டையை கொண்டு வர மறந்து விட்டார். அவருக்கு கௌரவ ஆடை அணிவிக்கப்படும் போது மரபுக்கு ஏற்ப அதன் பிறகு அவர் நான் உங்களுக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். நீங்கள் என்மீது மாபெரும் உபகாரம் செய்துள்ளீர்கள். இந்த நான்கு முழ ஆடைக்கு பதிலாக என்னுடைய தலைமுறையினர் உங்களுக்கு அடிமையாக இருப்பர் என்று ஏற்புரை நிகழ்த்த வேண்டியதிருந்தது. ஆனால் அவர் உரை நிகழ்த்த முன் வந்த போது திடீரென அவருக்கு தும்மல் வந்தது. மேலும் மூக்கிலிருந்து சளி வெளியே வந்தது. சளியோடு அவரது உரை நிகழ்ந்திருந்தால் ஒருவேளை அவர் கொலையும் செய்யப்படலாம் என்ற அச்சத்தில் இங்கும் அங்கும் துழாவினார். கைக்குட்டை கிடைக்காததால் அரசின் பார்வையிலிருந்து தன்னை மறைத்துக் கொண்டு அதே ஆடையினால் தனது மூக்கை துடைத்து விட்டார். அரசர் அதனை பார்த்து விட்டார். இந்த தீயவரின் ஆடையை அகற்றுங்கள். இவர் நம்முடைய கௌரவ ஆடையை இழிவுபடுத்தி விட்டார். மேலும் நாம் வழங்கிய அன்பளிப்பை கொண்டு மூக்கை துடைக்கின்றார் என்று கூறினார். அரசர் இவ்வாறு கூறியதும் ஷிபிலி தனது நாற்காலியில் இருந்து அழத் தொடங்கினார். அவருடைய உள்ளத்தில் நன்மையும், இறையச்சமும் இருந்ததினால் இறைவன் அவர் நேர்வழி பெறுவதற்காக ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருந்தான்.

அவர் அலறியதும் அரசர் நாம் அவர் மீது தான் கோபம் கொண்டோம். நீர் ஏன் அழுகிறீர் என்று கேட்டார். ஷிபிலி எழுந்து நின்று அரசரே! நான் என் பதவியை விட்டு விடுகிறேன் என்றார். அதற்கு அரசர், இந்த சமயத்திற்கு தேவையில்லாத வேலையை ஏன் செய்கிறீர்கள். உமக்கு என்ன நேர்ந்தது? நீர் ஏன் உன் பதவியை துறக்கிறாய் என்று கேட்டார். அதற்கு ஷிபிலி, அரசே! நான் இந்த பணியை செய்ய இயலாது என்று கூறினார். அதற்கு அரசர், உமக்கு என்ன ஆகிவிட்டது? என கேட்டார். அதற்கு ஷிபிலி அழுதவாறு இந்த படைத் தலைவர் இன்றிலிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தை விட்டு சென்றார். மேலும் நாட்டின் மிகப்பெரும் வீர தளபதிகள் தோல்வி கண்ட ஒரு முக்கியமான போருக்கு அனுப்பப்பட்டார். மேலும் மீண்டும் வெற்றி பெறுவது முற்றிலும் சாத்தியமற்றதாக உள்ள ஒரு பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

இவர் இரண்டு வருடங்கள் நாட்டிற்கு வெளியில் இருந்தார். இவர் காடுகளுக்கும், மலைகளுக்கும் சென்றார். மேலும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மரணித்தார். ஒவ்வொரு காலையும் மரணித்தார். ஒவ்வொரு மாலையும் மரணித்தார். ஒவ்வொரு மாலையும் அவருடைய மனைவி காலையில் நான் விதவையாக தான் எழுவேன் என எண்ணி வந்தாள். மேலும் ஒவ்வொரு காலையில் எழும் போதும் நான் விதவையாக இருக்கும் நிலையில் தான் இன்றைய மாலை பொழுது வருமோ என்று எண்ணினாள். ஒவ்வொரு மாலையும் படைத் தளபதியின் குழந்தைகள் காலையில் நாம் அனாதைகளாக எழுவோமோ என கருதியவாறு தூங்கினர். ஒவ்வொரு காலையும் அவரது குழந்தைகள் எழும் போது மாலையில் நாம் அனாதைகளாக ஆகிவிடுவோம் என்ற எண்ணத்தில் தான் எழுந்தனர்.

ஒரு தொடர் தியாகத்திற்குப் பிறகு அவர் வென்று உங்களுடைய அரசின் கீழ் அதைக் கொண்டு வந்தார். அதற்கு



பதிலாக தாங்கள் சில முழ துணியை வழங்கினீர்கள். அது ஒரு பொருட்டே அல்ல. ஆனால் அவர் நிர்பந்தத்திற்கு ஆளாகி அந்த கௌரவ ஆடையைக் கொண்டு மூக்கை துடைத்த ஒரு காரணத்திற்காகவே தாங்கள் அவர் மேல் பெரும் கோபம் கொண்டீர்கள். இவ்வாறிருக்க *இறைவன் எந்த அரசராலும் உருவாக்க முடியாத ஒரு உடலை தந்துள்ளான். அவனுக்கு நான் என்ன பதில் கூறுவேன்? அவன் எனக்கு இப்படிப்பட்ட ஓர் ஆடையை தந்துள்ளான். அரசே அதனை உமக்காக அழுக்கடைய செய்து விட்டேன். நான் அதைப்பற்றி என் இறைவனிடம் என்ன பதில் கூறுவேன்* என்று கூறியவாறு அரசவையில் இருந்து வெளியேறினார். ஆனால் அவர் எந்த அளவு அநீதி இழைப்பவராகவும், கொடியவராகவும் இருந்தார் என்றால் அவர் பள்ளிவாசலுக்கு சென்று நான் பாவமன்னிப்பு பெற விரும்புகிறேன் என்று கூறிய போது ஒவ்வொருவரும் பேறிழந்தவனே. ஷய்த்தானுடைய பாவமன்னிப்பும் எங்காவது ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? இங்கிருந்து வெளியேறு என்று கூறினார்கள். அவர் எல்லா இடமும் சுற்றித் திரிய ஆரம்பித்தார். ஆனால் எவருக்குமே அவருடைய பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளும் துணிவு வரவில்லை. இறுதியில் அவர் ஜுனைத் பக்தாதி (ரஹ்) அவர்களிடம் சென்று நான் இப்படிப்பட்ட தவறுகளை செய்து விட்டேன். இப்போது பாவமன்னிப்பு கிடைக்குமா? என்று கேட்டார். அதற்கு அவர் ஆம் கிடைக்கும். ஆனால், ஒரு நிபந்தனை. முதலில் அதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். அதற்கு ஷிபிலி எனக்கு அந்த நிபந்தனைகளை கூறுங்கள். நான் அந்த அனைத்து நிபந்தனைகளையும் ஏற்கத் தயாராக உள்ளேன் என்று கூறினார்.

அதற்கு அவர் நீ ஆளுநராக இருந்த நகருக்கு திரும்பி சென்று ஒவ்வொரு வீட்டின் கதவை தட்டி நான் உங்களிடம்

பாவமன்னிப்பு கேட்கிறேன் என்று கூறுவாயாக என்றார். நீ என்னென்ன அநீதிகள் இழைத்தாயோ அதற்கு அந்த மக்களிடம் மன்னிப்பு கேள் என்று கூறினார். அவர் அதை ஏற்றுக் கொள்வதாக கூறி நகருக்கு சென்று ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்ட ஆரம்பித்தார். மக்கள் வெளியே வந்ததும் நான் ஷிபிலி ஆவேன். இங்கு ஆளுநராக இருந்து வந்தேன். நான் குற்றம் இழைத்து வந்தேன்........ நான் தவறிழைத்து வந்தேன். மேலும் உங்கள் மீது அநீதி இழைத்து வந்தேன். அதற்காக இப்போது மன்னிப்பு கேட்கிறேன் என்றார். மக்களும் அப்படியா நாங்களும் மன்னித்து விட்டோம் என்று கூறினர். ஆனால் நன்மையின் விதை எப்போதும் வளர்ந்து கனிகளை தரும்.

சில வீடுகளை கடந்து சென்றதும் நேற்று வரை அநீதி இழைப்பதற்கு பெயர்போன அந்த ஆளுநர் ஒவ்வொரு வீடு வீடாக சென்று மன்னிப்பு கேட்கிறார் என்ற செய்தி நகர் முழுவதும் தீ போல பரவியது. மக்களது உள்ளங்களில் ஆன்மீக ஊற்று பீறிட்டு எழுந்தது. இப்படிப்பட்ட அநீதியாளர்களுக்கும் கூட நன்மை மற்றும் பாவ மன்னிப்பிற்கான நல்வாய்ப்பை வழங்குகின்ற நம்முடைய இறைவன் எவ்வளவு வல்லமைமிக்கவனாக இருக்கிறான் என்று மக்கள் கூறினர். பிறகு என்ன நிகழ்ந்தது என்றால் ஜுனைத் (ரஹ்) அவர்கள் கூறியதற்கு இணங்க ஷிபிலி அவர்கள் வெறுங்கையுடன் சென்று வீடு வீடாக கதவை தட்டினார். ஆனால் கதவை திறந்து குற்றங்களையும் புகார்களையும் கூறுவதற்கு பதிலாக மக்கள் உள்ளிருந்து அழுதவாறே வெளியே வந்து நீங்கள் எங்களை வெட்கமடையச் செய்து விடாதீர்கள். நீங்கள் எங்களின் ஆன்மீக தலைவர் ஆவீர்கள். இவ்வாறு எங்களை வெட்கமடையச் செய்யாதீர்கள் என்று மக்கள் கூறினர்.

சுருக்கமாக, ஷிபிலி முழு நகரத்திலுள்ள மக்களிடம் மன்னிப்பு கேட்ட பின்னர் ஜுனைத் (ரஹ்) அவர்களிடம் வந்த



போது அவரை மன்னித்து அவர்களின் சீடர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டார். இப்போது அவர் முஸ்லிம்களின் பெரும் இறைநேசர்களில் ஒருவராக கருதப்படுகின்றார்.

## 8. வாயிற் காவலன்

டால்ஸ்டாய் என்ற ரஷ்யாவின் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர் இருந்தார். அவர் லெனின் மற்றும் மார்க்ஸ் போன்றோருக்கு பிறகு அவர்களைப் போல் உயர் பதவி உடையவர்களில் ஒருவராக இருந்தார். பொதுவுடைமை கொள்கையை பரப்புவதில் மிக அதிகம் பங்கு பெற்றவர்களில் ஒருவரும் ஆவார். இப்பொழுதும் கூட உலகில் பெரும்பாலான மொழிகளில் அவருடைய நூல்களின் மொழியாக்கம் கிடைக்கின்றன. இவரது ஒரு தந்தைவழிப் பாட்டனார் ஏழு, எட்டு தலைமுறைக்கு முன்னர் பீட்டர் மன்னரின் காலத்தில் அவரது வாயிற் காவலனாக இருந்து வந்தார்.

ஒரு நாள் மன்னருக்கு ஏதோ ஒரு முக்கியமான பணி இருந்தது. அவர் தமது சமுதாயத்தின் நன்மைக்காக ஏதோவொரு திட்டம் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார். இன்று எந்த நபருக்கும் உள்ளே வர அனுமதி வழங்க வேண்டாம். ஏனென்றால் யாரேனும் உள்ளே வந்தால் என்னுடைய சிந்தனை சிதைந்து விடும். மேலும் நான் திட்டத்தை முழுமையான முறையில் தயார் செய்ய இயலாது போய் விடுவேன் என்று அரசர் டால்ஸ்டாய்க்கு கட்டளையிட்டும் வலியுறுத்தி கூறியவாறும் தனது அறைக்குள் சென்று விட்டார். ஆனால் துரதிஷ்டவசமாக அதே வேளையில் ஓர் இளவரசர் வந்தார். அவர் உள்ளே நுழைய விரும்பினார். டால்ஸ்டாய் வாசலுக்கு முன் தனது கைகளை விரித்தவாறு நீங்கள் உள்ளே செல்ல இயலாது என்று கூறினார். எந்த மனிதரையும் உள்ளே விட வேண்டாம் என்பது அரசக்

கட்டளையாகும் என்றார். அத்தருணம் வரை ரஷ்யாவின் சட்டம் ஒழுங்குபடுத்தப்படாமல் இருந்தது. பிரபுகளுக்கும், நவாப்களுக்கும், அரச குடும்பத்தை சார்ந்தவர்களுக்கும் பெரும் உரிமைகள் இருப்பதாக கருதப்பட்டு வந்தது. அந்த மரபுக்கு ஏற்ப இளவரசரை கோட்டைக்குள் வருவதை யாரும் தடுக்க முடியாத நிலை இருந்தது.

ஆனால், அவர்களை விட குறைவான தகுதி உள்ள சிலருக்கும் கூட இதே மரபு பேணப்பட்டு வந்தது. வாயிற் காவலன் இளவரசனை தடுத்ததும் அவர் நின்று விட்டார். மேலும் நான் யாரென்று உனக்கு தெரியாதா? என வாயிற் காவலனிடம் கேட்டார். அதற்கு அந்த வாயிற் காவலன் நான் நன்றாக அறிவேன். தாங்கள் மதிப்புமிக்க கோமகன் ஆவீர்கள் என்று பதில் கூறினார். அதற்கு அந்த இளவரசர் எந்நேரமும் உள்ளே நுழைவதற்கு எனக்கு அனுமதி உள்ளது என உனக்கு தெரியாதா? என்றார். அதற்கு நான் நன்கு அறிவேன் என வாயிற் காவலன் கூறினர். இதை கேட்ட இளவரசர் மீண்டும் முன்னேறியவாறு உள்ளே நுழைய முற்பட்டார். வாயிற் காவலன் மீண்டும் இளவரசரை தடுத்து இளவரசரே! இன்று எவரையும் உள்ளே விடக்கூடாது என்பது அரசரின் கட்டளையாகும் என்று கூறியதும் இளவரசருக்கு பெரும் கோபம் வந்தது. அவர் சாட்டையை எடுத்து வாயிற் காவலனை அடிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரம் அடித்த பிறகு இப்போது இவர் உணர்ந்திருப்பார் என இளவரசர் கருதினார். மீண்டும் இளவரசர் உள்ளே நுழைய முற்பட்டார். ஆனால் டால்ஸ்டாயோ மீண்டும் வழியை மறித்தவாறு நின்று கொண்டார். மேலும் கைகூப்பி இளவரசரே! எவரையும் உள்ளே நுழைய விடக்கூடாது என்பது அரசக் கட்டளையாகும் என்றார். இளவரசர் மீண்டும் வாயிற் காவலனை அடிக்க ஆரம்பித்து விட்டார். அவரும் தலையை குனிந்தவாறு



அடி வாங்கிக் கொண்டிருந்தார். நான்காவது முறையாக இளவரசர் உள்ளே நுழைய முற்பட்டதும் வாயிற் காவலன் மீண்டும் கைகளை விரித்தவாறு உள்ளே நுழைய அனுமதி இல்லை. மன்னர் தடுத்துள்ளார் என்று கூறினார். இளவரசர் மீண்டும் வாயிற் காவலனை அடிக்க ஆரம்பித்து விட்டார். தற்செயலாக முதல் முறை இளவரசர் வாயிற் காவலனை அடித்த போது அந்த ஓசை மன்னரின் காதுகளில் விழுந்தது. அவர் மேல் தளத்தின் ஜன்னல்களிலிருந்து இக்காட்சியை பார்க்க ஆரம்பித்தார். மூன்றவாது முறையாக இளவரசர் வாயிற் காவலனை அடித்துக் கொண்டிருந்த போது டால்ஸ்டாய் இங்கே வா என அரசர் அவரை அழைத்தார். டால்ஸ்டாய் உள்ளே சென்றார். அவரோடு இளவரசரும் மிகவும் கோபத்துடன் மன்னரிடம் சென்று இன்று வாயிற் காவலன் என்னை மிகவும் அவமதித்து விட்டான் என்று கூறினார்.

அதற்கு என்ன நடந்தது? என்று அரசர் வினவினார். நான் உள்ளே வர விரும்பினேன். ஆனால் டால்ஸ்டாய் என்னை உள்ளே வர விடவில்லை என இளவரசர் கூறினார். அரசர் இந்த சம்பவம் பற்றி நடந்தது எதுவுமே தெரியாதது போன்று முகத்தை வைத்துக் கொண்டு டால்ஸ்டாய் நீ இளவரசரை உள்ளே நுழைய விடாமல் ஏன் தடுத்தாய்? என்று கேட்டார். அதற்கு அவர், அரசே இன்று எவரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது தங்களின் கட்டளையாகும் என்றார். அரசர் இளவரசனை பார்த்து, நான் எவரையும் உள்ளே நுழைய அனுமதிக்காதே என்ற கட்டளை இட்டிருப்பதாக இவர் உமக்கு கூறினாரா ? என்று கேட்டார். அதற்கு இளவரசர் கூறத் தான் செய்தார். ஆனால் இளவரசரை எந்த ஒரு வாயிற் காவலனும் தடுத்து நிறுத்த முடியாது என்றார். அதற்கு அரசர், இளவரசரை எவரும் தடுக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் அரசரால் தடுக்க முடியும். நீர் இளவரசராக இருந்து கொண்டு சட்டத்தை

அவமதித்து விட்டாய். அவனோ வாயிற் காவலனாக இருந்தும் சட்டத்தின் மேன்மையை பேணியுள்ளான். மேலும் இது என்னுடைய கட்டளையாகும் என்று அவன் உம்மிடம் சொல்லியிருந்தும் நீர் அவனை அடித்து விட்டீர். எவ்வாறு நீர் அவனை அடித்தாயோ அதே போல் அந்த வாயிற் காவலனின் கைகளால் அதே போல் அடி வாங்குவது தான் இதற்குரிய தண்டனையாகும் என்று கூறினார்.

அதற்குப் பிறகு டால்ஸ்டாயிடம், டால்ஸ்டாயே! எழு. அந்த இளவரசனை அடி என அரசர் கட்டளையிட்டார். ரஷ்யா சட்டடத்தின்படி எந்த ஒரு படை வீரரையும் படை வீரர் அல்லாத ஒருவர் அடிக்க இயலாது. நான் ஒரு படை வீரர் ஆவேன். இந்த டால்ஸ்டாய் சாதாரண குடிமகன் ஆவான். இவன் என்னை அடிக்க இயலாது என்று இளவரசர் கூறினார். அதற்கு டால்ஸ்டாய் தளபதியே! நான் உனக்கு கூறுகிறேன். நீ இளவரசரை அடி என்று அரசர் கூறினார். அடிப்பதற்காக டால்ஸ்டாய் சாட்டையை எடுத்த போது நான் ரஷ்ய சார் அரசரின் படைத் தளபதி ஆவேன். படைத் தளபதியை படைத் தளபதி இல்லாத ஒருவர் அடிக்க முடியாது என்று இளவரசர் கூறினார்.

அதற்கு அரசர் டால்ஸ்டாய் படைத் தளபதியே! நீ இளவரசரை அடிப்பதற்கு நான் உனக்கு கட்டளை தருகிறேன் என்றார். அதற்கு இளவரசர் மீண்டும் ரஷ்ய அரசியல் அமைப்பு சட்டத்தை எடுத்துக் காட்டி எந்தவொரு நவாபையும் நவாப் அல்லாத ஒருவர் அடிக்க இயலாது என்று கூறினார். அதற்கு அரசர், அப்படியா? கோமகன் டால்ஸ்டாய்! எழுந்திருங்கள்; இளவரசரை அடியுங்கள் என்றார். இவ்வாறு அதே வேளையில் வாயிற் காவலனை கோமகன் தகுதிக்கு உயர்த்தி அவரைக் கொண்டு இளவரசருக்கு தண்டனை வழங்கினார்.



## 9. பன்றிக் குட்டியின் சாவு

***மனிதன் பிறருடைய விஷயங்களைக் கேட்டு அவர்களுடைய உள்ளத்தில் ஏற்படுகின்ற அந்த உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் யூகிக்க இயலாது. ஒருவருடைய கோழிக் குஞ்சு செத்து விட்டால் அவனுக்கு ஏற்படுகின்ற அந்த வேதனை பிறருடைய மகனின் மரணச் செய்தியை கேட்டும் ஏற்படுவதில்லை. மாறாக, உண்மை என்னவென்றால் உலகில் பெரும்பாலான மக்கள் பிறருடைய துக்கத்தை தன் துன்பமாக கருதுவதாக காட்டிக் கொண்டு அவரோடு அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றனர். அவர்களின் உள்ளத்தில் எவ்வித துக்கமும் இருப்பதில்லை. அவர்கள் துன்பத்திற்கு உள்ளானவர்கள் முன்னால் வந்தால் அழுவதைப் போன்று முகத்தை வைத்துக் கொள்கின்றனர். மேலும் ஆறுதலான ஒரு சில வார்த்தைகளை தம்முடைய வாயிலிருந்து கூறுகின்றனர். ஆனால் அவர்களுடைய உள்ளங்களில் துக்கத்தின் உணர்வுகள் அறவே இருப்பதில்லை. அதற்கு மாறாக அவர்களினுடைய அற்பமான பொருள் கூட வீணாகி விட்டால் அவர்களால் அந்த துக்கத்தை சகித்துக் கொள்ள முடிவதில்லை.***

நமது நாட்டில் புகழ்பெற்ற கதை ஒன்று உள்ளது. ஒரு துப்புரவு பணிப்பெண் இருந்தாள். அவள் மன்னரின் வீட்டில் துப்புரவு செய்து வந்தாள். ஒருமுறை அவள் அரச மாளிகையை விட்டு வெளியே வந்த போது நுழைவாயிலுக்குள் நின்றவாறு அதன் சுவரோடு தலையை வைத்து அழ ஆரம்பித்து விட்டாள். மேலும் எந்த அளவுக்கு வலி மற்றும் வேதனையோடு அழுதாள் என்றால் வெளியே நின்று கொண்டிருந்த வாயிற் காவலன் அரச குடும்பத்தில் ஏதோ மரணம் நிகழ்ந்து விட்டது எனக் கருதினான். இந்த சிந்தனையில் அவரும் எதையும் சிந்திக்காமல் அழ

ஆரம்பித்து விட்டார். அவர் அரச உப்பைத் தின்று விட்டு விசுவாசம் இல்லாதவனாக இருக்கிறானே என அவனைப் பற்றி மக்கள் எண்ணாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சுவரோடு நின்றவாறு செயற்கையாக தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். அவருடைய அழுகையைப் பார்த்து மற்றவர்களும் அழத் தொடங்கினர். அதனைப் பார்த்து இன்னும் சிலரும் அழத் தொடங்கினர். எதுவரையென்றால் அரசவை வரை இந்த விஷயம் சென்றடைந்தது. அரச குடும்பத்தில் ஏதேனும் மரணம் நிகழ்ந்து விட்டால் அரசவையில் உள்ளவர்கள் கருப்பு ஆடை அணிந்து வர வேண்டும் என்ற கட்டளை இருந்ததால் அவர்கள் ஓடோடி தங்களது வீடுகளுக்குச் சென்று ஒவ்வொருவரும் கருப்பு ஆடையை அணிந்து கொண்டு அரசவையில் தலையை குனிந்து அமர்ந்து விட்டனர். மேலும் அவர்கள் அழுகின்றனர் என்று தெரிவதற்காக கண்களுக்கு முன்னர் கைக்குட்டையையும் வைத்துக் கொண்டனர்.

கொஞ்சம் புத்திசாலியாக இருந்த எல்லாருக்கும் பெரிய அமைச்சர் ஒருவர் கருப்பு ஆடை அணியாமல் அரசவையில் வந்து அமர்ந்தார். மேலும் அவர் பக்கத்தில் இருந்தவர்களிடம் என்ன நடந்தது? என வினவினார். அதற்கு பக்கத்தில் இருந்தவர் எனக்கு ஒன்றும் தெரியாது. என் அருகில் இருக்கக் கூடியவருக்கு தெரிந்திருக்கும். நானோ அவர் துக்க ஆடையில் அமர்ந்திருப்பதைக் கண்டு ஒருவேளை அரச குடும்பத்தில் ஏதேனும் விபத்து நிகழ்ந்து விட்டது என்று நானும் அணிந்து வந்துள்ளேன் என்றார். அவருக்கு அருகில் இருந்தவரிடம் வினவிய போது அவரும் தனக்கு அருகில் உள்ளவரை சான்று காட்டினார். அவர் மூன்றாவது நபரையும், மூன்றாவது நபர் நான்காவது நபரையும் சான்றாக காட்டினர்.



இறுதியில் வாயிற் காவலன் வரை இந்த விஷயம் சென்றடைந்தது. அவர் வேலைக்கார பெண்ணை சான்றாக காட்டினார். அந்தப் பெண்ணை அழைத்து கேட்ட போது அல்லாஹ்வின் அருளால் கோட்டையில் அனைவரும் நலமாக இருக்கின்றார்கள். விஷயம் என்னவென்றால் நான் ஒரு பன்றிக் குட்டியை வளர்த்து வந்தேன். இன்று காலை அது மரணித்து விட்டது. துப்புரவு பணிக்கான நேரம் வந்து விட்டதனால் நான் விரைவாக அரண்மனைக்கு வந்து விட்டேன். மேலும் என்னுடைய உணர்வுகளை அடக்கி வைத்திருந்தேன். ஆனால் அரண்மனையை விட்டு வெளியே வந்ததும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நுழைவாயிலில் எனக்கு அழுகை வந்து விட்டது என்றாள்.

அந்த துப்புரவு பெண்ணின் அழுகை உண்மையான அழுகையாகும். ஏனென்றால் அந்த பன்றிக்குட்டி அந்த வேலைக்கார பெண்ணுடையதாகும். அது இறந்த போது வேலைக்காரிக்கு உண்மையிலேயே வேதனை ஏற்பட்டது. ஆனால் வாயிற்காவலன் மற்றும் அரசவையிலுள்ளவர்கள் அரசருக்காகவோ அல்லது ராணிக்காகவோ அல்லது இளவரசருக்காகவோ அழுது கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய அழுகை செயற்கை அழுகையாக இருந்தது. ஏனென்றால் அரசரோடோ, ராணியோடோ அவர்களுக்கு உண்மையான உளப்பூர்வமான உறவு இருக்கவில்லை.

## 10. அன்புடையோருக்கு ஏற்படும் வலி

***எனக்கு எப்போதும் வியப்பு ஏற்படுகின்றது. மேலும் நான், இறைவா! உன்னுடைய வல்லமைகளோ வியப்பிற்குரியவையாகும். நீ எவ்வாறு மக்களின் உள்ளத்தில் எனக்காக அன்பின் உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றாய்?*** என நான் எனது உள்ளத்தில் கூறிக் கொண்டிருக்கின்றேன். நான் சிலவேளை பயணத்தில் செல்லும் சர்ந்தப்பம் கிடைத்தது. நான் குதிரையில் பயணித்தால் ஏதாவதொரு இளைஞன் பாதுகாப்பு மற்றும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடைய குதிரையுடன் நடந்து வருகின்றார். நான் குதிரையை விட்டு இறங்கியதும் அவர் உடனடியாக முன்னே சென்று நீங்கள் களைப்படைந்து இருப்பீர்கள் என்று கூறி என்னுடைய காலை அமுக்க ஆரம்பித்து விடுகின்றார். நான் குதிரையில் தான் பயணம் செய்தேன். இவர் குதிரையோடு நடந்தே வந்தார். என்மீது இருக்கக்கூடிய அன்பின் காரணமாக இவர் குதிரையில் பயணித்து வந்தார். இவர் எவ்வாறு களைப்படைந்து இருப்பார்? என்ற எண்ணமே அவருக்கு இருப்பதில்லை. அவர் தான் குதிரையில் பயணித்து வந்ததாகவும் நான் நடந்து வந்ததாகவுமே கருதுகின்றார். நான் களைப்படையவில்லை. நான் குதிரையில் வருகின்றேன் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிய பிறகும் கூட இல்லை; எஜமானரே! நீங்கள் களைப்படைந்து இருப்பீர்கள். எனக்கு சேவை செய்வதற்கான சந்தர்ப்பம் கொடுங்கள் என்று கூறியவாறு கால்களை அமுக்க ஆரம்பித்து விடுகின்றார்.

எங்கு அன்பு இருக்குமோ அங்கு மனிதனுக்கு தன்னுடைய கஷ்டம் குறைவாகவே தெரிகின்றது. மேலும் தனது நேசத்திற்குரியவரின் கஷ்டம் மிக அதிகமாக தெரிகிறது. ஆனால் பொதுவாக மனிதனுக்கு தனது கஷ்டம் அதிகமாக உணரப்படுகின்றது. பிறருடைய கஷ்டம் குறைவாகத் தான் உணரப்படுகின்றது.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு நபித்தோழர் இருந்தார். காஃபிர்கள் அந்த சஹாபியை ஏமாற்றி கைது செய்து விட்டனர். அந்த நபித்தோழரின் கைகளால் மக்காவாசிகளில் நேசத்திற்குரிய ஒருவர் கொலையுண்டு இருந்ததால் அவரை கைது செய்து மக்காவாசிகளிடம் அவரை விற்று விட்டனர். மக்காவாசிகள் அந்த நேசத்திற்குரியவருக்கு பதிலாக இந்த சஹாபியை துன்புறுத்தி கொல்ல வேண்டும் என விரும்பினர். சில நாட்கள் அவரை சிறையில் வைத்திருந்தனர். அந்த சஹாபியை ஒரு நாள் அவர்கள் ஷஹீது செய்ய வேண்டும் என விரும்பினர். அவரைக் கொலை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஆரம்பித்தனர். அந்த சஹாபி மிகவும் அஞ்சியிருப்பார் எனக் கருதி அந்த சஹாபியிடம் அவர்கள் இப்போது முஹம்மது (ஸல்) அவர்கள் உன்னுடைய இடத்தில் இருக்க வேண்டும். நீ மதீனாவில் உன்னுடைய மனைவி மக்களோடு நிம்மதியாக இருக்க வேண்டும் என உன்னுடைய உள்ளம் விரும்புகிறதா? என்று கேட்ட போது அந்த சஹாபியோ முஹம்மது (ஸல்) அவர்கள் இங்கிருக்க வேண்டும். நான் மதீனாவில் என் மனைவி மக்களோடு நிம்மதியாக இருக்க வேண்டும் என நீ விரும்புகிறாயா என நீங்கள் கேட்கின்றீர்கள். ஆனால் நான் வீட்டில் நிம்மதியாக இருக்க நேர்ந்து முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மதீனாவின் தெருக்களில் நடக்கும் போது ஏதேனும் முள் குத்துவதை கூட என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறினார்.

***இப்போது பாருங்கள். அந்த சஹாபிக்கு தன்னுடைய கஷ்டம் அந்த சமயம் நினைவிற்கு வரவில்லை. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த அன்பு மற்றும் நேசத்தில் மூழ்கி இருந்ததன் காரணமாக அன்னாருடைய ஒரு கற்பனையான துன்பம் கூட அவரை நிம்மதி இழக்கச் செய்து விட்டது.***

## 11. பெருநாள்

இறைவன் பெருநாள் அன்று உண்ணுமாறும் பருகுமாறும் கட்டளையிட்டுள்ளான். மேலும் எவர் பெருநாள் அன்று நோன்பு நோற்பாரோ அவர் ஷய்த்தான் ஆவார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். இதன் காரணமாகத் தான் இறைவன் தன்னுடைய அடியாரிடம் இன்று நீ எனக்காக உண்பாயாக. பருகுவாயாக என்று கூறுகின்றான்.

மனிதன் ஒரு கவளமாவது சாப்பிட வேண்டும். ஒரு மிடறாவது தண்ணீர் அருந்த வேண்டும். உண்மையில் இறைவனுடைய கட்டளைக்கு கட்டுப்பட்டவாறு உண்பதும், பருகுவதும் உண்மையான உண்பதும், பருகுவதும் ஆகும். எனவே...... இன்று உண்பதும் பருகுவதும் மார்க்கமாகும்... வெளிப்படையான இன்பங்கள் கூட இறை வணக்கங்களாக ஆகிவிட்ட இந்த மார்க்கம் எவ்வளவு அழகிய மார்க்கம் !

இந்துக்களினுடைய ஏதேனும் ஒரு நபி இது போன்ற விஷயத்தை கூறியிருந்து அதைத் தவறாக புரிந்ததன் காரணமாக அவர்களில் பூசாரிகள் உருவாகி விட்டனர் என்று தெரிய வருகின்றது. இஸ்லாம் எல்லா விஷயம் தொடர்பாகவும் விவரமாக எடுத்துக் கூறுகின்றது. ஆனால் பழைய மார்க்கங்களில் சைகைகள் மட்டுமே உள்ளன. இந்துக்களில் பிராமணனுக்கு உண்ணக் கொடுப்பது அதிக நற்கூலி உடையதாக கருதப்படுகின்றது. சாரத் பண்டிகை நாட்களில் பணக்காரார்கள் அவர்களுக்கு அதிகமாக உணவளிக்கின்றனர். அவர்கள் நன்றாக சாப்பிட்டு முடித்ததும் பிறகு அவர்களுக்கென பரிசுகளை வழங்குகின்றனர். உதாரணமாக, இத்தனை லட்டுக்களை ஒருவர் சாப்பிட்டால் இத்தனை ரூபாய் வழங்கப்படும் என்கின்றனர். பிறகு ஒவ்வொரு லட்டுக்கும் இரண்டு ரூபாய்,



மூன்று ரூபாய் வழங்க ஆரம்பிக்கின்றனர். இந்த மக்களும் கூட பல மாதங்களுக்கு முன்பாகவே அதிகம் சாப்பிடுவதற்கான பயிற்சியை மேற்கொள்கின்றனர். அதிகம் சாப்பிட்டதன் காரணமாக மரணம் ஏற்பட்ட சம்பவங்கள் அதிகம் நிகழ்ந்துள்ள குடும்பம் தான் அவர்களில் மிகவும் கண்ணியத்திற்குரிய குடும்பமாக கருதப்படுகின்றனது.

ஒரு புகழ்பெற்ற கதை உள்ளது. ஒரு பிராமணிய மாமியார் தன்னுடைய மருமகளிடம் உன்னுடைய கணவரும் மாமனாரும் வருவார்கள். அவர்கள் அதிகம் சாப்பிட்டதன் காரணமாக அவர்களால் அமர முடியாது. எனவே அவர்கள் வருவதற்கு முன்பாகவே படுக்கையை விரித்தால் அவர்கள் வந்ததும் படுப்பார்கள் என்று கூறினாள். இதைக் கேட்டதும் மருமகள் கதறி அழ ஆரம்பித்தாள். மேலும் கடவுளே ! என்னுடைய தாய் தந்தையரின் குடி முழுகி போகட்டும். அவர்கள் என்னை இழிவுபடுத்தி விட்டார்கள் என சாபமிட ஆரம்பித்தாள். மாமியார் மருமகளை அமைதிப்படுத்தி அழுவதற்கான காரணத்தை கேட்க முயற்சித்தாள். ஆனால் மருமகளோ அதிகமாக கூச்சலிட்டாள். மாமியாரோ கை கூப்பியும், கால்களை பிடித்தும் நான் என்ன கூறியதினால் நீ இவ்வாறு அழுகிறாய் என கேட்டாள். ஆனால் மருமகளோ எந்த பதிலும் அளிக்காமல் தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாள். எதுவரையென்றால் கூச்சலைக் கேட்டு அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூட ஆரம்பித்தனர். அவர்களும் கூட அழுகைக்கான காரணத்தை கேட்க ஆரம்பித்தனர். மிகவும் வற்புறுத்திக் கேட்ட பிறகு நான் பாக்கியமற்றவளாக ஆகி விட்டேன். எப்படிப்பட்ட மோசமான குடும்பத்தில் எனக்கு திருமணம் நிகழ்ந்துள்ளது என்றால் சாரத் உண்ட பிறகு நடந்து வீட்டிற்கு வருகின்றனர். எங்களுடைய குடும்பத்திலுள்ளவர்களோ சாப்பிட்ட

பிறகு நடக்கவே முடியாது. அவர்களை பல்லக்கில் தூக்கியே கொண்டு வருவார்கள் என்று கூறினாள்.

இந்துக்களில் சாரத்களின்☆ நிலைமை இவ்வாறு ஆகி விட்டது. ஆனாலும் கூட உண்மையில் இந்த கருத்தும் நம்முடைய பெருநாளன்று உண்ண வேண்டும் என்ற கருத்து தான் ஒரு காலத்தில் இந்துக்களிடமும் இருந்து வந்தது என்று தெரிய வருகின்றது. ஏனென்றால் உண்ணவும் பருகவும் இறைவன் கட்டளை இட்டுள்ளான். எனவே அந்த நாள் உண்பது தான் உண்மையான உண்ணுதல் ஆகும். ஆனால் மக்களின் அறியாமையினால் இப்போது இதுவொரு விநோதமான சடங்காக ஆகிவிட்டது. உண்மையில் இறைவனுக்காக உண்ணுங்கள் என்பதே கட்டளையாக இருக்கும். ஆனால் முட்டாள் முல்லாக்கள் எந்த அளவுக்கு சாப்பிட வேண்டுமென்றால் வயிற்றில் மந்த நிலை அல்லது பேதி ஏற்பட வேண்டும் என்று பெருநாளை தவறாக புரிந்துள்ளார்கள். இதே போன்று பண்டிதர்களும் தவறாக புரிந்துள்ளார்கள்.

---

☆ இறந்தவர்களுக்காக இந்துக்கள் பிராமணர்களுக்கு உணவு வழங்கும் ஒரு விழா.

## 12. அன்பளிப்பு

***தன்னுடைய எந்த அடியாரை எவ்வாறு நடத்த வேண்டும் என்று இறைவன் நன்றாக அறிவான். அவன் தன்னுடைய ஏதேனும் அடியாரை முட்களைக் கடக்கச் செய்தவாறு தன் பக்கம் அழைக்கிறான். மேலும் சிலரை மலர்ப்பாதைகளை கடக்கச் செய்தவாறு தன் பக்கம் அழைக்கிறான் என்பது தொன்றுதொட்டே அவனது நடைமுறையாக இருந்து வந்துள்ளது. இறைவன் பட்டினியின் மூலமாக ஒருவரை தன் அருகே கொண்டு***



***வர விரும்பினால் அப்போது பட்டினி கிடப்பதே நன்மையாகும். மேலும் ஒருவருக்கு இறைவன் உணவு வழங்கி தன் அருகே கொண்டு வர விரும்பினால் அப்போது உணவு உண்பதே இறைவனுடைய விருப்பத்தை பெறுவதற்கு காரணியாக அமைகின்றது.***

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒரு முறை அதிகமாக செல்வம் வந்தது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் வாங்கிக் கொள்ளுங்கள். நான் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்ற செல்வத்தை வழங்குகிறேன் என அன்ஸார் தோழர்களிடம் கூறினார்கள். அப்போது அன்ஸார் தோழர்கள், நபிகள் நாயகமே! இவை அனைத்தையும் முஹாஜிர்களுக்கு வழங்கி விடுங்கள். எங்களிடம் இருக்கின்றதே போதுமானதாகும் எனக் கூறினர். வெளிப்படையாக இது அன்ஸார் தோழர்களின் மிகப்பெரிய தியாகமாக தெரிகிறது. அதாவது செல்வம் கிடைக்கிறது. ஆனால் அவர்களோ மறுக்கின்றனர். மேலும் எங்களிடம் அதிகம் இருக்கிறது. எங்களுடைய பிற சகோதரர்களுக்கு கொடுங்கள் என்கின்றனர். ஆனால் இறைவனின் பார்வையில் இது தியாகமாக இருக்கவில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது இதற்கு பதிலளித்தவாறு நான் உங்களுக்கு ஒரு அருளை வழங்க நாடினேன். ஆனால் நீங்களோ நிராகரித்து விட்டீர்கள். இப்போது உலகில் உங்களுக்கு எந்த அருளும் கிடைக்காது. கவ்ஸர் தடாகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று அன்ஸார்களிடம் கூறினார்கள்.

பாருங்கள்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு அரசாட்சி கிடைத்தும் எந்த அன்ஸாரியும் அரசராக ஆகவில்லை. 1300 ஆண்டு காலமாக முஹாஜிர்கள் அரசர்கள் ஆனார்கள். அடிமைகள் அரசர்கள் ஆனார்கள்.

சேவகர்கள் அரசர் ஆனார்கள். இஸ்லாம் மூலமாக ரஜபுத்திரர்கள், முகலாயர்கள், பட்டானியர்கள், ஈரானியர்கள், திரிபோலியர்கள் மற்றும் தீபகற்பங்களைச் சார்ந்தவர்களே அரசர்களாயினர். ஆனால் அவர்கள் இறைவன் மற்றும் அவனுடைய தூதர் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்காக தனது வீட்டை வழங்கியும் அன்ஸார் தோழர்களுக்காக அரசாட்சி கிடைக்கவில்லை. இறைவனுக்காக அவர்கள் பட்டினியை மேற்கொள்ளவில்லை என்பதற்காக இல்லை. மாறாக, இறைவனுக்காக உணவு உண்ணவில்லை என்பதற்காக அவர்களுக்கு கிடைக்கவில்லை. எவ்வித சந்தேகமுமின்றி அவர்கள் அந்த அருளை நிராகரித்து அவமதித்ததன் காரணமாகவும் இறைவன் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, அவர்களின் அறியாமையின் காரணமாக இறைவன் அவ்வாறு செய்தான். அவர்களை இறைவன் நற்கூலியிலிருந்து விலக்கி வைக்கவில்லை. மாறாக, கவ்ஸர் தடாகத்தில் அருட்கள் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை வழங்கினான். ஆனால் உலகில் அவர்களுக்கு ஒருபோதும் அரசாட்சிக்கான நற்பாக்கியம் கிடைக்கவில்லை.

## 13. தியாகம்

***கூட்டான பணிகளுக்காக நீங்கள் முயற்சிக்கும் பொழுது உங்களில் ஒவ்வொருவரின் தியாகமும் அவருடைய வாழ்நாளிலேயே விளைவை ஏற்படுத்தி விடும் என்பது கட்டாயமல்ல. ஒரு கூட்டம் தியாகங்கள் செய்து அதற்கு எவ்வித விளைவும் காணாமல் இருப்பது முற்றிலும் சாத்தியமானதாகும். மேலும் வேறு சிலர் தியாகங்கள் செய்து அவர்களுக்கு அதற்கான விளைவு கிடைத்து விட்டால் சமுதாய பணிகளினுடைய விளைவை தனி நபர்கள் அடிப்படையில் பார்க்கக் கூடாது. இந்த படிப்பினையை கற்றுக் கொள்ளக்கூடிய***



***சமுதாயங்கள் மகிழ்ச்சியின் மீது மகிழ்ச்சி கண்டு கொண்டே செல்கின்றன. ஆனால் இந்த பாடத்தை மறந்து விடக்கூடிய சமுதாயங்கள் தன்னுடைய நோக்கத்தில் ஒரு போதும் வெற்றி பெற முடிவதில்லை...***

ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான சண்டையின் ஆரம்ப நாட்களில் ஒரு பத்திரிகையில் நான் படித்த செய்தியாவது ஒரு ஜெர்மனிய மூதாட்டி அவளுடைய வயது 80 ஆகும். அவளுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் போரில் கொல்லப்பட்டான். அந்த மூதாட்டிக்கு நன்மதிப்பு இருந்தது. அவளுடைய ஆறுதலுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என அரசாங்கமும் எண்ணியது. இதன் காரணமாக போர் அமைச்சர் தரப்பிலிருந்து தன்னை வந்து சந்திக்குமாறு அந்த மூதாட்டிக்கு ஒரு கடிதம் வந்தது. போர் அமைச்சரே அந்த மூதாட்டிக்கு அவளுடைய மகனின் மரணச் செய்தியை கூறுவதாகவும் மேலும் அவளை கவுரவப்படுத்துவார் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த மூதாட்டி வந்த போது போர் அமைச்சர் மன்னர் தரப்பிலிருந்து மூதாட்டிக்கு நன்றியை தெரிவித்தவாறு நீங்கள் உங்கள் நாட்டிற்காக பெரும் பெரும் தியாகங்களை செய்துள்ளீர்கள். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் உங்களுடைய மகன் போரில் மரணித்து விட்டான் என்று கூறினார்.

மூதாட்டி இந்த செய்தியை கேட்டு விட்டு வெளியே வந்த போது அவளுடைய உடல் துக்கத்தால் நிற்க முடியாத அளவிற்கு நடுங்கிக் கொண்டிருந்து. அவள் கூனி குனிந்து விட்டாள். ஆனால் என்னுடைய மகன் கொல்லப்பட்டு விட்டால் என்ன? என்று போலியாக வாய்விட்டு சிரித்தவாறு என்னுடைய மகன் மரணித்து விட்டால் என்ன? அவன் நாட்டிற்காக தியாகமாகி உள்ளான் என்று கூறிக் கொண்டு இருந்தாள்.

ஜெர்மன் சமுதாயத்திற்கு எதிரியாக இருந்தாலும் கூட அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர் இந்த காட்சியை கண்டு எங்களை அறியாமலேயே அழுகை வந்து விட்டது என எழுதுகிறார். இப்போது பாருங்கள். அங்கு மன துக்கம் எந்த அளவுக்கு அதிகமாக இருந்ததென்றால் அந்த மூதாட்டியால் நிற்கக்கூட முடியாமல் இருந்தது. இன்னொரு பக்கம் மக்களுக்கு காட்டுவதற்காக தனது கைத்தடியின் துணையுடன் சப்தமாக சிரித்தவாறு என்னுடைய மகன் மரணித்தால் என்ன? அவன் நாட்டிற்காகத் தான் மரணித்துள்ளான் என்று கூறினாள். இப்படிப்பட்ட மக்களுக்கு மறுமை வாழ்க்கையில் பரிசுகளுக்கான எவ்வித வாக்குறுதியும் இல்லை. மேலும் மக்களிடம் மறுமை வாழ்க்கையின் மீது நம்பிக்கையும் இல்லை. மரணத்திற்குப் பிறகு எந்த வாழ்க்கையும் இல்லை என்று கூறியவாறு அவர்கள் தம் வாழ்நாளை கழிக்கின்றனர். அவர்கள் தியாகம் செய்கின்றனர். மேலும் அவர்களுடைய தியாகத்திற்குப் பிறகு மகிழ்ச்சிக்குரிய நாளும் அவர்களுக்கு வருவதில்லை. ஆனாலும் கூட அவர்கள் தியாகத்திலிருந்து பின் வாங்குவதில்லை. இந்த தியாகத்திற்கு எங்களுக்கு ஏதேனும் பரிசு கிடைக்குமா? இல்லையா? என்று கூறுங்கள் என்று அவர்கள் யாரிடமும் கேட்பதில்லை. எங்களது சமுதாயத்தின் வாழ்க்கையே எங்களது வாழ்க்கையாகும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

***ஒருவர் செய்த தியாகங்கள் அவருக்கு தனிப்பட்ட முறையில் பலன் அளிக்கும் என்ற பார்வையில் தங்களுடைய தியாகங்களை பார்க்காதீர்கள்... இந்த தியாகங்களால் நமக்கு நம்முடைய வாழ்நாளில் என்ன பலன் கிடைக்கும்? என்ற கோணத்தில் இந்த தியாகங்களை பார்க்கக் கூடாது. மாறாக, நான் அஹ்மதிய்யத்தின் உறுப்பினர் ஆவேன். எனக்கு மகிழ்ச்சியான நாளை பார்க்கக்கூடிய பாக்கியம் கிடைக்காமல் போனாலும் என்னுடைய சமுதாயம் பார்த்தாலும் கூட அந்த மகிழ்ச்சி எனக்கு கிடைத்து விடும் என்ற கோணத்தில் பார்க்க வேண்டும்.***



## 14. புகழ்

ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் சாஹிபு அவர்கள் கூறி வந்ததுண்டு. ஓரிடத்தில் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதில் பெரும் கருத்து வேறுபாடு தோன்றியது. என்ன நடந்தது என்று நான் கேட்டேன். அங்கு எங்களுக்குள் கடும் சண்டை சச்சரவு ஏற்பட்டு விட்டது. நான் தான் President ஆவேன் என்று ஒருவர் கூற இன்னொருவர் நான் தான் President ஆவேன் என்று கூறுகிறார் என்று கூறினார்கள். நான், ஒருவரை President என்று ஆக்குங்கள். இன்னொருவரின் பெயரை சத்ர் ஆக்குங்கள். மூன்றாம் நபரை முரப்பி (தர்பிய்யத் கொடுப்பவர்) யாக ஆக்குங்கள். நான்காமவரை சேர்மனாக ஆக்குங்கள் என்று கூறினேன். அவர்கள் இதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றார்கள். மேலும் அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

ஒருவரை முரப்பி என்று அறிவித்தார்கள். அவருடைய காதில் மெதுவாக முரப்பி தான் எல்லாரையும் விட பெரியவர். அவருடன் ஒப்பிடும் போது சத்ர் சாதாரண மனிதர் என்று கூறினார். பிறகு இரண்டாவது நபரிடம் சென்று, நீங்கள் தான் சத்ர். எல்லாரையும் விட பெரியவர் சத்ர் ஆவார். ஏனென்றால் எல்லாரையும் பிட உயர்ந்த இடம் அவருக்கு கிடைக்கிறது. முரப்பி என்பவர் அப்படி எதுவும் பெரியவர் இல்லை. அவர் தன் வீட்டில் உட்கார்ந்திருப்பவர் தான் என்று கூறினார்கள். பிறகு மூன்றாவது நபரிடம் சென்று நீங்கள் தான் எங்கள் President. சத்ர் என்பது முல்லாக்களும் குல் அுது ஓதக் கூடியவர்களும் பயன்படுத்தும் வார்த்தையாகும். தாங்கள் இக்காலத்தின் ஒளிமயமான

சிந்தனையை உடைய மனிதர்களின் பக்கம் பாருங்கள். அவர்கள் தமக்குள் சிறந்தவரை தலைவராக ஆக்குகின்றனர். எனவே நாங்கள் உங்களை தலைவராக ஆக்குகிறோம் என்று கூறி விட்டு அவர்கள் நாலாவது நபரிடம் சென்று நீங்கள் எங்கள் சேர்மன் என்று கூறினார்கள்.

ஆகவே, ஒவ்வொருவரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஏனென்றால் பணி செய்வது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் இதுதான். இணை கண்காணிப்பாளருக்கு கடிதம் எழுத வேண்டியது வந்தால் முஸ்லிம் சங்கத்தின் முரப்பி என்றும், இரண்டாவது நபர் முஸ்லிம் சங்கத்தின் சேர்மன் என்றும், மூன்றாம் நபர் முஸ்லிம் சங்கத்தின் சத்ர் என்றும், நான்காம் நபர் முஸ்லிம் சங்கத்தின் தலைவர் என்றும் எழுதி நாங்கள் முஸ்லிம்களின் தலைவர்களாவோம் என்று சொல்வதையே அவர்கள் விரும்புகின்றனர். மற்றபடி அவர்கள் எந்த வேலையும் செய்வதில்லை. சிலருடைய பழக்கம் என்னவென்றால் அவர்கள் இதுபோன்ற பதவிகளைப் பெறுவதற்காகவே சங்கத்தில் சேர்கின்றனர்.

***தலைவர்களை உண்டாக்குவது இறைவனது வேலையாகும். எவரை தலைவராக்குவதற்கு இறைவன் விரும்புகின்றானோ அவரைப் பற்றிப் பிடித்து அவரைத் தலைவராக்குகின்றான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அலைஹிஸ் ஸலாம் அவர்கள்) தம் நூல்களில் நான் மறைவான அறையில் இருந்தேன். என்னை எவரும் அறியாதிருந்தனர். என்னைப் பற்றி பிறர் அறிய வேண்டும் என்று நான் விரும்பியதில்லை. அவன் என்னை தனிமையாகிய மூலையிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியே கொண்டு வந்தான். நான் மறைவாக இருக்கவும், மறைவாக மரணிக்கவுமே விரும்பினேன்.***



***ஆனால் இறைவனோ முழு உலகிலும் கண்ணியத்துடன் உன்னை புகழ்பெறச் செய்வேன் என்று கூறியதாக எழுதியுள்ளார்கள்.***

## 15. அணிந்து நைந்த தொப்பி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால், இறை நெருக்கத்தை பெற்றவர்கள், ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் காணப்படுகின்றனர். அவர்களின் அருள்களிலிருந்து பிற மக்களும் பயனடைந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு முறை கைஸர் அரசனுக்கு கடும் தலைவலி ஏற்பட்டது. எல்லா வகை மருத்துவ சிகிச்சைகள் செய்தும் அவருக்கு சுகம் கிடைக்கவில்லை. எவரோ ஒருவர் அவரிடம் உங்களது நிலையைப் பற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதி அவர்களிடமிருந்து பரக்கத்திற்காக ஏதாவதொரு பொருளையும் கேட்டுப் பெறுமாறு அறிவுரை கூறினார்கள். அவ்வாறு செய்தால் அவர் உங்களுக்காக பிரார்த்தனை செய்வதுடன் பரக்கத்திற்காக ஏதாவதொரு பொருளை உங்களுக்கு அனுப்பவும் செய்வார். அவரது பிரார்த்தனையால் நீங்கள் நிச்சயமாக நலம் பெறுவீர்கள் என்றும் அறிவுரை கூறினார். கைஸர் தன் தூதரை உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பினார்.

இவர்கள் அகங்காரம் கொண்ட மக்கள் ஆவர். இவர்கள் நம்மிடம் வர மாட்டார்கள். ஆனால் இப்போது இவர் துன்பத்தில் சிக்கி இருப்பதால் தன் தூதரை நம்மிடம் அனுப்பியுள்ளார். இப்போது நான் வேறு ஏதேனும் பரக்கத்திற்குரிய பொருளை அவருக்கு அனுப்பினால், இழிவாகக்கருதி அதை அவர் பயன்படுத்த மாட்டார். ஆகவே, நாம் எப்படிப்பட்ட பொருளை அவருக்கு அனுப்ப வேண்டும் என்றால் அது பரக்கத்திற்குரிய

பொருளாகவும் அவருக்கு பயன்பட வேண்டும். மேலும் அவரது அகங்காரத்தையும் உடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எண்ணினார்கள். ஆகவே அவர்கள் தன் பழைய தொப்பி ஒன்றை பரக்கத்திற்காக அனுப்பினார்கள். அந்த தொப்பியில் ஆங்காங்கே பல இடங்களில் கறைகள் காணப்பட்டன. அழுக்குகள் இருந்ததால் அதன் நிறம் கருப்பாக இருந்தது. அதை அருளுக்குரிய பொருளாக அனுப்பி வைத்தார். அவர் அத்தொப்பியைக் கண்டதும் அது அவரை புண்படுத்தியது. அத்தொப்பியை அவர் அணியவில்லை. ஆனால் உமக்கு இப்போது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலமாகவே அருள் கிடைக்க முடியும் என்பதை இறைவன் கூற விரும்பினான். அவருக்கு தாங்கிக் கொள்ள முடியாத தலைவலி ஏற்பட்ட போது அவர் தம் பணியாளர்களிடம் உமர் (ரலி) அவர்கள் அனுப்பிய தொப்பியை தன் தலையில் அணிந்து கொள்வதற்காக கொண்டு வருமாறு கூறினார்கள். அதனை தன் தலையில் அணிந்தார். உடனே அவருடைய தலைவலி நீங்கத் தொடங்கியது. எட்டு, பத்து நாட்களுக்குப் பிறகு அவருக்கு தலைவலி வருவதுண்டு. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழுக்கடைந்த தொப்பியை, அரசவையில் இருக்கும் நேரமெல்லாம் அவர் அணிவது அவர்க்கு வழக்கமாகி விட்டது. இறைவன் அவருக்கு காட்டிய இந்த அடையாளத்தில் இன்னொரு மறைவான விஷயமும் இருந்தது.

அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு தோழர் கைஸரிடம் சிறைப்பட்டிருந்தார். அவருக்கு பன்றிக் கறியை உணவாக கொடுக்க கட்டளை போட்டிருந்தார். நபித்தோழரோ பன்றிக் கறி பக்கமே செல்லாமல் பட்டினி கிடந்தார். இப்படி பல நாட்கள் பட்டினி கிடந்து அவர் மரணிக்கும் நிலையை அடையும் போது கைஸர் அவருக்கு ரொட்டி வழங்கினான். அவர்க்கு உடலில் தெம்பு வந்ததும் மீண்டும்



அவருக்கு பன்றி இறைச்சியை கொடுக்க கட்டளையிட்டான். இவ்வாறு அவன் அவரை வாழவும் விடவில்லை. சாகவும் விடவில்லை. அந்த முஸ்லிமை நீ சிறையில் வைத்திருப்பது தான் உன் தலைவலிக்கு காரணம் என்று ஒருவர் கைஸரிடம் கூறினார். நீ உனக்காக பிரார்த்தனை செய்து, பரக்கத்திற்காக ஒரு பொருளை அனுப்பும்படி உமர் (ரலி) அவர்களிடம் வேண்டுவதே இதற்குரிய தீர்வாகும் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் தம் தொப்பியை அவருக்கு அனுப்பிய போது அவரது தலைவலி நீங்கியது. இதனால் நபித்தோழரை விடுதலை செய்யும் அளவிற்கு அவர் நல்ல தாக்கத்திற்கு ஆளானார்.

***இப்போது பாருங்கள். கைஸர், நபித்தோழர் ஒருவருக்கு துன்பம் கொடுக்கிறார். ஆனால் அல்லாஹ் அவருக்கு தண்டனை என்ற முறையில் அவர் தலையில் ஒரு வலியை ஏற்படுத்தினான். உமர் (ரலி) அவர்களிடம் நினைவுப் பொருளை வேண்டுமாறும், பிரார்த்தனை செய்ய சொல்லுமாறும் யாரோ ஒருவர் அவருக்கு ஆலோசனை வழங்குகிறார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அருளுக்குரிய பொருளை அனுப்பினார்கள். கைஸரின் தலைவலி நீங்கியது. இவ்வாறு அல்லாஹ் அந்த நபித்தோழரின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் செய்கின்றான். இதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையையும் அவர் மீது வெளிப்படுத்தினான்.***

## 16. இளவரசன்

***இருவகை மகிழ்ச்சி உள்ளன. ஒன்று ஒருவனுடைய தனிப்பட்டதாகும். இன்னொரு மகிழ்ச்சி அவருடைய முன்னோர்களிடமிருந்து பங்காக கிடைக்கக் கூடியதாகும். தானே பெற்ற இன்பம் என்பது எந்த வகையிலும் மன மகிழ்ச்சிக்கு உரியதே ஆகும். ஆனால் பரம்பரை வழியாக வந்த மன மகிழ்ச்சி நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அது தானே அனுபவித்த மன மகிழ்ச்சியுடன் ஒன்று சேரா விட்டால் பயனற்றதாகும். இன்னும் கூறுவதென்றால், சிலவேளைகளில் அது இழிவிற்கும் அவமானத்திற்கும் காரணமாக ஆகிவிடும். ஒரு சமுதாயத்தின் முழு மகிழ்ச்சி இந்த இரு வகையான மகிழ்ச்சிகளையும் பெற்றிருப்பதாகும். ஒருவகை இன்பமானது தனி மனிதன் தியாகம் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைப்பதாகும். இரண்டாம் வகை இன்பமானது இறைவழியில் தியாகம் செய்வதற்கு அவர்களின் மூதாதையர்களுக்கு கிடைத்த நல்வாய்ப்புகள் ஆகும். ஒரு சமுதாயம் இந்த இரு வகை மகிழ்ச்சிகளையும் அடைந்து விட்டால் அதன் மகிழ்ச்சி அந்த வேளையில் முழுமை பெறுகின்றது. தன் தாய் தந்தையர்கள் மதிப்பும் மரியாதையும் பெற்று விளங்கியதை காண்கின்ற ஒருவன் தான் இகழ்ச்சியுடன் இருக்க நேர்ந்தால் அவன் உள்ளம் துன்பத்தில் மூழ்குகிறது. மேலும் அவனால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.***

வரலாற்றில் ஒரு சம்பவம் வருகின்றது. ஒரு நாள் செல்வமிக்க ஒரு கவிஞர் குளியலறையில் குளிப்பதற்காக சென்றார். அவர் தன் உடலை தேய்த்து விடுவதற்கு ஒரு பணியாளரை அழைக்குமாறு கட்டளையிட்டார். அக்குளியலறையின் உரிமையாளர் தன் பணியாட்களுள் வலிமைமிக்க வாலிபனை



அக்கவிஞரின் உடலை தேய்த்து விட அனுப்பினார். கீழாடைகளை அணிந்த பிறகு அந்த கவிஞர் கீழாடையைக் கட்டிக் கொண்டு மீதமுள்ள தன் ஆடைகளை கழற்றி விட்டு குளியலறையில் அமர்ந்து கொண்டார். நறுமணமிக்க தண்ணீர் அவர் உடல் மீது ஊற்றப்பட்டது. அவரது உடலில் ஊழியர் நறுமண தைலங்களை தேய்த்து விட ஆரம்பித்தார். அப்போது அந்த நிலைமை அவருக்கு எந்த அளவிற்கு இன்பகரமானதாக தெரிந்தது என்றால் அவரது மனம் இசையால் ஈர்க்கப்பட்டு சிலவற்றை முனங்கியவாறு கவிதையை படித்தார்.

அக்கவிஞர் கவிதை வரிகளை பாடியதும் திடீரென பணியாளனின் நிலைமை மாறியது. அவன் அலறியவாறு நினைவிழந்து கீழே விழுந்தான். குளிக்கக்கூடிய அவர் அநேகமாக இவருக்கு வலிப்பு வந்து விட்டது என்று எண்ணி குளியலறையின் உரிமையாளரை அழைத்தார். பணியாளனைக் குறித்து நீர் பைத்தியமான நோயாளி ஒருவனை எனது உடலை தேய்த்து விட அனுப்பி விட்டீர் என்று குற்றம் சாட்டினார். உரிமையாளர் மன்னிப்பு கேட்டார். இதற்கு முன் இவனுக்கு நோய் இருப்பது எனக்கு தெரியாது. அவன் மிகவும் உடல் நலம் கொண்டவன் என்று கூறினார். அவர்கள் அப்பணியாளனின் மயக்கத்தை தெளிவித்து என்ன நடந்தது? இன்று வரை இதுபோன்ற வலிப்பு ஒருபோதும் உனக்கு வந்ததில்லையே? என்று கேட்டனர்.

அந்த இளம் பணியாள், நீங்கள் பாடிய இக்கவிதையை யாரிடமிருந்து கேட்டீர்கள்? என்று கவிஞரைப் பார்த்து மிகவும் நடுங்கியபடி கேட்டான். அவை என் கவிதைகள். அவற்றை நான் மிகவும் நேசிக்கின்றேன். ஏனென்றால், நான் மிக ஏழையாக இருந்தேன். பழைய உணவுக்காக கூட நான் ஏங்கியதுண்டு. அச்சமயம் ஹாரூஹ் ரஷீதின் அமைச்சர்களில் ஒருவராக இருந்த

ஃபஸல் பர்மகிக்கு ஒரு மகன் பிறந்துள்ளான் என்று கேள்விப்பட்டேன். அவர் ஹாரூன் ரஷீதின் அமைச்சர்களில் ஒருவரும் முதலமைச்சர் யஹ்யா பர்மகியின் மகனும் ஆவார். கவிதைப் போட்டிக்காக, கவிஞர்கள் தாங்கள் எழுதிய கவிதையுடன் வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர். போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவருக்கு பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தனர். ஆகவே நான் என் வெற்றியை மதிப்பிட கவிதையில் சில வரிகளை எழுதிக் கொண்டு கூட்டத்திற்குச் சென்றேன். என் முறை வந்ததும் என்னுடைய கவிதைகளைக் கூறினேன். ஃபஸல் பர்மக்கியும் அவரது சகோதரர்களும் அவரின் தந்தையும் அக்கவிதையை மிகவும் விரும்பினர். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் எனக்கு பல லட்சங்களையும், பல பணியாளர்களையும், பல குதிரைகளையும், ஒட்டகங்களையும், வெள்ளியிலான, தங்கத்திலான பாத்திரங்களையும், கம்பளங்களையும், தரை விரிப்புகளையும், நறுமணங்களின் பெரிய கருவூலத்தையும் எனக்கு தந்தனர். இவற்றைக் கண்டு நான் வியந்து போய் விட்டேன். அமைச்சரே! இவற்றையெல்லாம் வைக்க என் வீட்டில் இடமில்லையே என்று கூறினேன். அதற்கு அவர்கள் கவலை வேண்டாம். எங்களின் பணியாளர்கள் இப்பொழுது தங்களுக்காக ஒரு பெரும் கட்டடத்தை இன்ன இடத்தில் வாங்கியுள்ளார்கள். எங்களுடைய பணியாளர்கள் அவற்றை முழுமையாக இப்போதே இந்த புதிய மாளிகைக்கு கொண்டு சென்று அங்கு வைத்து விடுவார்கள் என்று கூறினார்.

அந்நாள் முதல் நான் செல்வமிக்கவனாக எண்ணப்பட்டேன். இக்கவிதைகள் எனக்கு மிகவும் பிரியமானவையாகும். ஏனென்றால் அவை என் நிலையை மாற்றி விட்டது. என் வறுமைமையில் இருந்து என்னை வெளியே கொண்டு வந்து வசதி வாய்ப்பில் குடி அமர்த்தியது என்று அந்தக் கவிஞர் கூறினார். உங்கள்



தகுதியை உயர்த்திய கவிதையை எந்த மகனுக்காக எழுதினீர்களோ அந்த மகன் நான் தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று அந்த பணியாள் கேட்டான். அக்கவிதை வரிகளை உங்கள் நாவிலிருந்து கேட்ட போது அந்த நிகழ்ச்சியை நான் எண்ணிப் பார்த்தேன். அதை என்னுடைய பாட்டிகளும், செவிலித் தாய்மார்களும் என்னிடம் கூறினர். நான் பிறந்த போது கவிஞர் ஒருவர் பெரும் பரிசு பெற்றார் என்று கூறியிருந்தார்கள். எந்த குழந்தையின் பிறப்புக்காக இப்பரிசு கொடுக்கப்பட்டதோ, எந்த கவிதைக்காக பரிசு வழங்கப்பட்டதோ அக்கவிதை வரிகளை இன்று ஒரு அந்நியர் ஆறுதலுடனும் அமைதியுடனும் குளித்துக் கொண்டிருக்கும் போது பாடுகிறார். எந்த பையனுக்காக கவிதை பாடப்பட்டதோ அப்பையன் ஒரு பணியாளாக அவருக்கு உடலைத் தேய்த்து விடுவதையும் எண்ணிப் பார்த்தேன் என்று அப்பணியாள் கூறினார். அந்த கவிஞர் எந்த அளவிற்கு தாக்கத்திற்கு ஆளானார் என்றால் அவர் அவனை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தார். இந்த செல்வமெல்லாம் உன்னுடைய தந்தை பாட்டனார் எனக்குத் தந்தது. உண்மையில் இது உன்னுடைய செல்வமாகும். நீ என் வீட்டிற்கு வா. நான் பணியாளாக உனக்குத் தொண்டு செய்வேன். உனக்கு எந்த கஷ்டமும் வராமல் பார்த்துக் கொள்வேன் என்றும் கூறினார். அதற்கு அவ்வாலிபன் நாங்கள் அடைந்த இழிவான நிலை எங்களை மிகவும் திணறடித்து விட்டது. எனவே என் முன்னோர் வழங்கிய பரிசுகளை நான் அனுபவித்து மேலும் இழிவை நான் வாங்க விரும்பவில்லை. என்னைப் பற்றிய இரகசியம் வெளிவந்து விட்டது. எனவே, நான் இங்கு இனிமேல் இருக்க முடியாது. இப்போது நான் வேறு இடம் நோக்கி சென்று விடுவேன். அது என்னைப் பற்றி யாரும் அறியாதவர்களும், என் முன்னோர்கள் அடைந்த தாழ்வு நிலையை என் முகம் பார்த்து

நினைவூட்டாதவர்களும் இருக்கும் இடமாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறி யாரும் அறியாத இடத்திற்குச் சென்று தலைமறைவாகி விட்டான்.

***பாருங்கள். இதுவொரு உதாரணமாகும். அதாவது முன்னோர்கள் பெற்ற மதிப்பில் அவர்களுடைய சந்ததிகளுக்கு பங்கும் கிடைக்க வில்லை. எவ்வித பலனும் கிடைக்க வில்லை. மாறாக, நல்ல சந்ததியின் துன்பத்திற்கு அது காரணமாகி விடும்.***

## 17. வயலின் - நரம்பிசைக் கருவி

ஒரு மன்னரின் பணியாள் கையில் வயலின் இசைக் கருவியை வைத்துக் கொண்டு வாசித்துக் கொண்டிருப்பதை எங்கோ அமர்ந்திருந்த சான்றோர் ஒருவர் கண்டார். அவரிடமிருந்து அந்த இசைக் கருவியை பறித்து உடைத்து விட்டார். அந்தப் பணியாள் மன்னரிடம் முறையிட்டார். அரசே! இன்று என் இசைக் கருவியை அவர் உடைத்து விட்டார். நாளை மந்திரியையோ, உங்களையோ அவர் இழிவுபடுத்தலாம் என்று கூறினார். அந்த மன்னருக்கு கோபம் வந்தது. அந்த பெரியவரை அழைத்து வரச் செய்தார். அரசர் தன் அருகே ஒரு வயலின் வைத்திருந்தார். அந்த பெரியவர் அரசவைக்கு வந்தார். அவரிடம் அரசர் எதுவும் கூறவில்லை. வயோலினை கையில் எடுத்து இசைக்க ஆரம்பித்தார். அந்த பெரியவரோ தலை குனிந்து உட்கார்ந்திருந்தார். அரசர் அவரைப் பார்த்து, நீர் நேற்று என் பணியாளின் இசைக் கருவியை உடைத்து விட்டீர். இன்று என்னுடைய இசைக் கருவியை ஏன் உடைக்கவில்லை ? என்று கேட்டார். அதற்கு அந்த பெரியவர், மாண்புமிகு மன்னரே ! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தீமையைக் கண்டால் வலிமை இருந்தால் அதைக் கொண்டு சீர்திருத்தம் செய்ய முயலுங்கள்.



உங்களுக்கு அதற்கான துணிச்சல் இல்லையென்றால் நாவைக் கொண்டு அதைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்யுங்கள். அவ்வாறு செய்வதற்கும் துணிவு இல்லையென்றால் குறைந்தபட்சம் உள்ளத்தளவில் அதை வெறுத்து விடுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு அரசே! நேற்று நான் கடுமையுடன் நடந்து கொண்டு ஒரு தீமையை சீர்திருத்தும் ஆற்றல் உள்ளவனாய் இருந்தேன். ஆகவே நான் அந்த பணியாளின் இசைக் கருவியை உடைத்து விட்டேன். அதைக் கொண்டு அத்தீமையை தடுத்தேன். ஆனால், இன்று தீமையை தடுக்கும் ஆற்றலும், அதற்கு எதிராக அறிவுரை கூறும் தைரியமும் என்னிடம் இல்லை. ஆனால் அரசே உள்ளத்தளவில் அதை நான் வெறுக்கிறேன் என்று கூறினார்.

நான் ஓர் அமெரிக்க பெண் கவிஞரின் கவிதைகளை படித்துள்ளேன். அவள் தன்னுடைய கவிதைகளில் ஒரு மிகவும் நுட்பமான கருத்தை கூறியுள்ளாள். அவள் கூறுவதாவது, என் இறப்புக்குப் பிறகு நான் இறைவனின் முன்னால் இருப்பேன். செல்வம் படைத்தவர்கள் அறச் செயலுக்காக வழங்கிய வைரங்களையும், முத்துக்களையும் இறைவன் முன்னால் வைப்பார்கள். பொது நலத் தொண்டர்கள் தாம் ஆற்றிய பணிகளை அவன் முன் வைப்பார்கள். மேலும் நாங்கள் சமுதாயத்திற்கு இவற்றை செய்துள்ளோம் என்று கூறுவார்கள். இவற்றையெல்லாம் கவனித்தபடி அவர்களுக்கு அருகில் நின்றவாறு நான் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனென்றால் அறவழியில் செலவு செய்ய கொடுப்பதற்கு என்னிடம் செல்வம் எதுவும் இல்லை. என் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பணியாற்றிட எனக்கு அறிவும் ஆற்றலும் இருந்ததில்லை. ஆனால் இறைவனிடத்து கொண்ட அன்பினால்

நான் கண்ணீர் வடித்துள்ளேன். அவை அவனுடைய அரியணையின் அருகில் கிடக்கிறது. அந்த கண்ணீர் பரிசை அவனுக்கு அன்பளிப்பாக வழங்குவேன்.

வாசகர்களே! யாருடைய பரிசை அவன் ஏற்றுக் கொள்வான் என்று உங்களுக்குத் தெரியுமா? அவன் என் கண்ணீரையே ஏற்றுக் கொள்வான்.

***இவ்வாறு ஒரு முஸ்லிம்... குறைந்தபட்சம்... இறை சந்நிதியில் விழுந்து கண்ணீர் வடிக்க முடியும். முஸ்லிம்கள் இதைச் செய்ய முடியும் என்றால் அப்போது இது அவர்களின் பெருநாளாகும். இல்லாவிட்டால் அவர்களின் பெருநாள் உண்மையான பெருநாள் அல்ல.***

## 18. நோன்பு நோற்றல்

***நோன்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கருதி மக்கள் இப்பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். இறைவன் தன்னை வழிபடும் வாய்ப்பை தங்களுக்கு வழங்கியுள்ளான் என்று அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால் இறைவன் உண்மையில் தன்னை வழிபடும் வாய்ப்பை வழங்கியுள்ளானா என்பதும் உண்மையில் தன்னை வழிபட்டதை அவன் ஏற்றுக் கொண்டானா என்பதும் கேள்விக்குறியாகும். நாம் வழிபடும் வாய்ப்பை பெற்றிருந்தாலும் நம் வழிபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பது நமக்கு எப்படித் தெரியும். ஏனென்றால் பல வழிபாடுகள் ஏற்கப்படுவதில்லை. இவ்வாறே சில நோன்பாளிகளின் நோன்பும் ஏற்கப்படுவதில்லை. நோய், இயலாமை போன்றவற்றால் பலர் நோன்பு பிடிக்கும் வாய்ப்பை***



***இழந்து விடுகின்றனர். வேறு பலரோ ஆற்றல் இருந்தும் நோன்பு பிடிப்பதில்லை. இப்படிப்பட்ட எல்லா மக்களும் பெருநாளை கொண்டாடுகின்றனர். மாறாக, இந்த மக்கள் தான் பெருநாளை கொண்டாடுவதில் மற்றவர்களை விட முன்னிலையில் நிற்கிறார்கள்.***

நம் நாட்டில் புகழ்பெற்ற நகைச்சுவை ஒன்று உள்ளது. ஒரு அடிமைப்பெண் ரமலான் மாதத்தில் தொடர்ந்து விழித்தெழிந்து சஹ்ர் உணவு உண்பாள். ஆனால் நோன்பு பிடிப்பதில்லை. ஒரு நாள் அவளுடைய எஜமானி, அப்பணிப் பெண்ணிடம், நீ தினந்தோறும் விடியற்காலையில் எழுந்து உணவு உண்கிறாய். ஆனால் நோன்பு பிடிப்பதில்லையே? அப்படியென்றால் நீ ஏன் விடியற்காலை எழ வேண்டும்? என்று கேட்டாள். அதற்கு அப்பணிப்பெண், நான் தொழுவதில்லை. நோன்பு பிடிப்பதில்லை. விடியற்காலை சஹ்ர் உணவும் உண்ணாமல் நான் காஃபிராக வேண்டுமா? என்று கேட்டாள். அவளின் பார்வையில் இஸ்லாத்தின் தூண்கள் மூன்றாகும். தொழுகை, நோன்பு, சஹ்ர் நேர உணவு உண்ணுதல் ஆகியவை ஆகும். தொழுகையும், நோன்பும் விடுபட்டாலும் இஸ்லாம் நிலைத்திருக்கவே செய்கிறது. ஆனால் மூன்றாவது தூணாகிய ஸஹ்ர் உணவு உண்ணுதல் விடுபட்டு விட்டால் மனிதன் காஃபிராகி விடுகின்றான்.

இதுவொரு நகைச்சுவை தான். ஆனால் இதனை நன்கு சிந்தித்தால் பெரும்பாலான மக்கள் இப்படியே இருக்கின்றனர். அவர்கள் தொழுவதில்லை. நோன்பு நோற்பதில்லை. ஆனால் பெருநாளை பிறரை விட பெரு மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். மாறாக, எல்லாரையும் விட முன்னிலையில் வந்து கலந்து கொள்கின்றனர் என்று தெரிகிறது.

## 19. ஜெர்மனி மொழி சொற்பொழிவு

ஃபிரான்ஸில் ஒரு சிறுமி திடீரென்று வலிப்பு நோய் தாக்குதலுக்கு ஆளானாள். அந்த வலிப்பு வரும் போது ஜெர்மன் மொழியில் சில மார்க்க பிரார்த்தனைகளை அவள் கூற ஆரம்பித்து விடுவாள். அச்சிறுமி ஃபிரஞ்சு மொழியை பேசுபவள். அவளுக்கு ஜெர்மன் மொழியில் ஒரு எழுத்துகூட தெரியாது. ஆனால் வலிப்பு ஏற்படும் போது அவள் ஜெர்மன் மொழி பேச ஆரம்பிக்கிறாள். இப்போது ஜின் இருப்பது நிரூபணமாகி விட்டது என உடனே டாக்டர்கள் கூச்சலிட்டனர். இப்பெண்ணுக்கு ஜெர்மனி மொழி தெரியாது. இவள் ஜெர்மன் மொழி பேசுகிறாள். நிச்சயமாக இவள் தலைமீது ஜின் ஏறிவிட்டது என்றார்கள்.

இறுதியில் ஒரு மருத்துவர் இது பற்றி ஆராய ஆரம்பித்தார். அவர் நினைவாற்றல் துறையில் புகழ்வாய்ந்த நிபுணர் ஆவார். அவர் தன் ஆராய்ச்சியைத் தொடங்கினார். அச்சிறுமிக்கு இரண்டு அல்லது இரண்டரை வயது இருந்த போது அவளின் தாய் ஒரு ஜெர்மன் பாதிரியாரிடம் வேலை செய்து வந்தாள் என்பதை கண்டறிந்தார். அந்த பாதிரியார் ஜெர்மன் மொழியில் சொற்பொழிவுகள் செய்யும் போது அச்சிறுமி தொட்டிலில் படுத்துக் கிடப்பாள். இதனைக் கண்டறிந்ததும் அந்த மருத்துவர் பாதிரியாரை கண்டறிய புறப்பட்டார். அச்சமயம் ஜெர்மன் பாதிரியார் ஸ்பெயினில் இருந்தது தெரிய வந்தது. மருத்துவர் ஸ்பெயினை அடைந்த போது பாதிரியார் ஓய்வு பெற்று ஜெர்மன் சென்று விட்டதை அறிந்தார். அவரைத் தேடி ஜெர்மன் சென்றார். அங்கு சென்ற போது அந்த பாதிரியார் மரணமடைந்து விட்டார் என்று அவருக்கு தெரிய வந்தது. அந்த மருத்துவர் தன் முயற்சியை கைவிடவில்லை. அவர் பாதிரியாரின் குடும்பத்தினரிடம் சென்று பாதிரியார் எழுதிய பழைய தாள்கள்



இருந்தால் காட்டும்படி கேட்டார். அவர் குடும்பத்தினர் தேடிப்பார்த்து சில தாள்களை மருத்துவரிடம் கொடுத்தனர். அவற்றை மருத்துவர் ஆராய்ந்த போது அவை பாதிரியாரின் சொற்பொழிவுகள் என்று கண்டு பிடித்தார். சிறுமிக்கு உணர்வற்ற நிலையின்போது கூறும் பிரார்த்தனைகள் அதில் காணப்பட்டது. சிறுமிக்கு இரண்டு, இரண்டரை வயது இருந்த போது அவள் முன்னிலையில் பாதிரியார் கூறிய சில விஷயங்களை எல்லாம் அல்லாஹ் அவள் மூளையில் பாதுகாத்து வைத்திருந்தான்.

***இந்த காரணத்தினால் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முஸ்லிம் வீட்டில் குழந்தைப் பிறந்தால் உடனடியாக அதன் ஒரு காதில் பாங்கும், இன்னொரு காதில் இக்காமத்தும் கூற வேண்டும் என்று கூறினார்கள். மனித மூளை பழைய சம்பவங்களை பல்லாண்டுகளுக்கு பாதுகாத்து வைத்துள்ளதை ஐரோப்பிய சிந்தனையாளர்கள் இன்று கண்டுபிடித்துள்ளனர். ஆனால் 1400 ஆண்டுகளுக்கு முன்பே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இக்கருத்தினைக் குறித்து கூறி விட்டார்கள்.***

## 20. சோம்பேறிகள்

***வேலை செய்யாமல் இருக்கும் பழக்கம் மனிதனை மிகவும் சீர்கெடுத்து விடுகிறது. ஒரு நாட்டில் அது பற்றி கூறப்படுகின்ற உதாரணங்கள் உண்மையில் அவை அந்நாட்டின் நிலைமைகளை பிரதிபலிக்கிறது. அதில் அச்சமுதாயத்தின் நடத்தை எடுத்துக் கூறப்படுகின்றது.***

நம் நாட்டில் எல்லாருக்கும் தெரிந்த கதை ஒன்று உண்டு. ஒரு சிப்பாய் பயணம் செய்து கொண்டிருந்தார். திடீரென்று

அவனை யாரோ அழைப்பதனை அவன் கேட்டான். சிப்பாயே சிறிது இங்கு வாருங்கள். விரைந்து வாருங்கள். மிகவும் முக்கியமான பணி இருக்கின்றது என்ற குரல் அவனுக்கு கேட்க ஆரம்பித்தது. அந்த சிப்பாய் முக்கியமான வேலைக்காக சென்று கொண்டிருந்தார். 50, 60 கஜ தூரத்திலிருந்து அவரை அழைக்கும் சப்தம் கேட்டது. அவர் அந்த இடத்திற்குச் சென்றார். அங்கு இரண்டு மனிதர்கள் படுத்துக் கிடந்தனர். அவர்களுள் ஒருவன் சிப்பாயிடம் தயவு செய்து என் மார்பின் மேல் கிடக்கும் இலந்தை பழத்தை எடுத்து என் வாயில் போடுங்கள் என்று கூறினான். அவனுடைய வேண்டுகோளை கேட்டு அவர் கடுங்கோபங் கொண்டார். சிப்பாய் அந்த மனிதரை ஏசிப் பேசினார். மேலும் நீ ஒன்றுக்கும் ஆகாதவன் ஆவாய். நான் முக்கியமான பணிக்காக சென்று கொண்டிருக்கின்றேன். நீங்கள் என்னை 50, 60 கஜ தூரத்திலிருந்து அழைத்தீர்கள். உன் நெஞ்சில் கிடக்கும் இலந்தை பழத்தை நீயே எடுத்து சாப்பிடலாம். இவ்வளவு தூரத்திலிருந்து என்னை அழைத்த நீ கை, கால் இல்லாத முடவனா? என்று கூறினார். அவன் பக்கத்தில் படுத்துக் கிடந்த மற்றவன் இதனைக் கேட்டு அன்புள்ள சிப்பாயே! அதை விட்டு விடுங்கள். ஏன் இத்தனை கோபம் கொள்கிறீர்கள். இவன் எப்படிப்பட்டவன் என்றால் ஒன்றுக்கும் உதவாதவன். எதனாலும் திருத்த முடியாதவன். படு சோம்பேறி. பாருங்களேன். இரவு முழுவதும் என் முகத்தை ஒரு நாய் நக்கிக் கொண்டிருந்தது. இவன் அந்த நாயை சீ என்று கூட விரட்டவில்லை என்று கூறினான்.

இந்த உதாரணத்தில் நம் நாட்டின் செயலற்ற தன்மையை படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இவர்களைப் போன்றே எல்லா நாட்டிலும் மக்கள் உள்ளனர் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால்



இங்கு அதிகம் உள்ளனர். இங்கு வேலை செய்யக் கூடியவர்களும் சோம்பேறிகளே ஆவர். நான் பலமுறை ஓர் உதாரணத்தை கூறியுள்ளேன். இங்கு கூலித் தொழிலாளிகள் செங்கற்களை முட்டைகளைப் போன்று கையாளுகிறார்கள். அந்த அளவுக்கு மெது மெதுவாக அதை தூக்குகின்றனர். அவ்வாறு எடுக்கின்ற போது ஓய்வு எடுக்கிறார்கள். அவற்றை கீழே வைக்கும் போதும் ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். ஹுக்காவை சில முறை உறுஞ்சுவதற்கு சென்று வருவோம் என்று கொஞ்ச நேரத்திற்கு ஒரு முறை செல்கிறார்கள்.

## 21. மாவரைக்கும் கல்

***அறிவுக் கூர்மையும், கல்வி அறிவும் தனித்தனியானவை. ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபட்டது. அறிவும் சிறந்த ஒன்று தான். ஆனால் அறிவுக் கூர்மை இல்லாமல் கல்வி அறிவு பயனற்றதாகும்.***

மன்னர் ஒருவர் இருந்தார். அவர் தன் நாட்டிலுள்ள புகழ்பெற்ற ஜோதிடரை அழைத்து வரச் செய்தார். அரசர் தன் மகனை அந்த ஜோதிடனின் பொறுப்பில் ஒப்படைத்தார். ஜோதிட அறிவை தன் மகனுக்குக் கற்றுக் கொடுக்குமாறு அரசர் ஜோதிடருக்கு அறிவுறுத்தினார்.

ஜோதிடர் அரசரின் மகனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவனுக்கு ஒரு காலம் வரை கற்றுக் கொடுத்தார். ஜோதிடம் சம்பந்தமாக அவருக்குத் தெரிந்ததை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்து அவனை அரசரிடம் அழைத்து வந்தார். அரசரைப் பார்த்து மேன்மை மிகு அரசே! ஜோதிடம்

சம்பந்தமாக எல்லாக் கல்வியையும் கற்றுக் கொடுத்து விட்டேன். நீங்கள் விரும்பினால் அவனை சோதித்து பார்க்கலாம் என்று கூறினார். அரசர் தன் மோதிரத்தின் கல்லை தன் கைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு அவனிடம், நீ உன் ஜோதிட அறிவைக் கொண்டு என் கைக்குள் இருப்பதைக் கூறு என்று கேட்டார். அவன் ஜோதிடத்தில் கணித்துப் பார்த்து மாவு அரைக்கும் கல் என்று கூறினான். அரசர் அந்த ஜோதிடரைப் பார்த்து நீங்கள் இவனுக்கு என்ன கற்றுக் கொடுத்தீர்கள் என்று கேட்டார். அவர், அரசே! மாவு அரைக்கும் கல்லும் கல் தான். மோதிரக் கல்லும் ஒரு கல் தான். என் கல்வியறிவு சரியானது. ஆனால் மாவு அரைக்கும் கல்லை கைக்குள் அடக்கிக் கொள்ள முடியாது என்பதை அறியும் அளவுக்கு உங்கள் மகனுக்கு அறிவுக் கூர்மை இல்லை. இதற்கு நான் என்ன செய்ய முடியும் ? என் கல்வியறிவு மிகவும் சரியானது என்று கூறினார்.

இதே போன்ற ஒரு நகைச்சுவையை பலமுறை நான் கூறியுள்ளேன். இதை நான் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிடம் கேட்டுள்ளேன். ஒரு கிராமத்திலுள்ள பெரியவர்கள் ஒரு பையனை மருத்துவம் படிக்க வேறோர் இடத்திற்கு அனுப்பினர். ஏனென்றால் அந்த கிராமத்தில் மருத்துவர்கள் யாரும் இல்லை. அவர்கள், அந்தப் பையனை மருத்துவம் கற்று திரும்பும் போது தங்கள் தேவைகள் நிறைவேறும். மருத்துவர் இல்லாததினால் அன்றாடம் ஏற்படும் கஷ்டங்கள் போய் விடும் என்று எண்ணினர். அந்தப் பையன் வேறோர் இடத்தில் இருந்த புகழ்மிக்க மருத்துவரிடம் சென்று எங்கள் ஊரில் மருத்துவர் எவரும் இல்லாததினால் எங்கள் ஊர் பெரியவர்கள் மருத்துவம் கற்க என்னை உங்களிடம் அனுப்பியுள்ளனர் என்று கூறினான்.



அந்த மருத்துவர் அது பாராட்டத்தக்கது தான். இதை விடச் சிறந்த நற்காரியம் வேறு என்ன இருக்க முடியும்? மருத்துவ சேவை மூலம் சமுதாயத்திற்கு தொண்டு செய்யலாம் என்று கூறினார். இப்பணி மிகவும் நற்கூலிக்கு உரியதாகும். நான் உனக்கு மருத்துவம் பற்றி எல்லாம் கற்பிக்கிறேன் என்று கூறினார். அந்தப் பையன் அவருடன் தங்கினான். மறுநாளே மருத்துவர் ஒரு நோயாளியைக் காணச் சென்றார். தன்னுடன் அப்பையனையும் அழைத்துச் சென்றார். அவர்கள் நோயாளியின் வீட்டிற்குச் சென்று அமர்ந்தனர். மருத்துவர் நோயாளியின் நாடித் துடிப்பைப் பார்த்தார். அவருடைய உடல் நிலை குறித்து விசாரித்தார். உரையாடலின் போது நேற்று நீங்கள் கொண்டைக் கடலை சாப்பிட்டீர்களா? என்று கேட்டார். அந்த நோயாளி, ஆமாம். நேற்று கொஞ்சம் கொண்டைக் கடலை சாப்பிட்டேன் என்றார். மருத்துவர், உங்கள் இரைப்பை பலவீனமாக இருக்கிறது. இது போன்ற கடினமான உணவு செரிமானம் ஆகாது. இது தான் வயிற்று வலிக்கு காரணம். நீங்கள் இது போன்றவற்றைச் சாப்பிடக் கூடாது என்று கூறினார். பிறகு மருத்துவர் அவர்க்கு ஒரு மருந்தை எழுதிக் கொடுத்து விட்டு திரும்பினார்.

வீடு வந்து சேர்ந்ததும் அப்பையன் இப்போது நான் திரும்பிச் செல்ல விரும்புகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள் என்று கூறினான். மருத்துவர், இவ்வளவு சீக்கிரமா? நீ மருத்துவம் கற்க வந்திருக்கிறாய் என்று கூறினார். அப்பையன், நான் மருத்துவத்தை கற்று விட்டேன். அறிவுக் கூர்மை உடையவனுக்கு அது மிக கடினம் இல்லை என்று பதில் கூறினான். மருத்துவர், நான் உனக்கு ஒரு பாடம் கூட நடத்தவில்லையே என்று கேட்டார். அப்பையன், மதி நுட்பம் உடையவர்ளுக்கு எந்த பாடமும் தேவையில்லை. இறையருளால் நான் அறிவுக் கூர்மை

உடையவனாவேன். நான் மருத்துவம் முழுவதும் கற்று விட்டேன் என்று கூறினான். மருத்துவர், அவன் இங்கு தங்கி என்னிடமிருந்து முறையாக மருத்துவத்தைக் கற்க வேண்டும் என்று அதிகமாக புரிய வைத்தார். ஆனால் அப்பையன், அதனை ஏற்காமல் சென்று விட்டான்.

ஊரிலுள்ளவர்கள் அவன் இவ்வளவு விரைவாக திரும்பியதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். அவன் மதிநுட்பம் உடையவர்கள் மருத்துவம் படிப்பது ஒன்றும் கஷ்டம் இல்லை. நான் அங்கு சென்று சேர்ந்ததும் அனைத்து மருத்துவத்தையும் கற்று விட்டேன் என்று கூறினான்.

எவ்வாறிருப்பினும் அந்த நாட்களில் பணம் படைத்த ஒருவர் நோயுற்றார். மருத்துவம் பார்க்க அப்பையன் அழைக்கப் –பட்டான். அவன் நாடித்துடிப்பைப் பார்த்தான். உடல் நிலை பற்றி கேட்டறிந்தான். அதன் பிறகு அவன், நீங்கள் செல்வம் படைத்தவர். உங்களுக்கு இத்தகைய பொருட்கள் எப்படி செரிமானம் ஆகும்? நீங்கள் குதிரைக் கடிவாளத்தை சாப்பிட்டீர்களா? என்று சொல்லுங்கள் என்று கேட்டான். அந்த நோயாளி, நீ என்ன முட்டாள்தனமாகப் பேசுகிறாய். யாராவது குதிரைக் கடிவாளத்தை சாப்பிடுவார்களா? என்று கேட்டார். அதற்கு அப்பையன், நீங்கள் ஒப்புக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் நீங்கள் குதிரைக் கடிவாளத்தை சாப்பிட்டுள்ளீர்கள் என்று கூறினான். அவருடைய வேலையாட்கள் தன் எஜமானரை அவன் இழிவுபடுத்தியதைக் கண்டு அவனை அடித்தனர். அவன் அடி வாங்கிக் கொண்டே நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நோய் பற்றி நான் கூறிய காரணம் சரியானது என்று தொடர்ந்து அவன் கூறிக் கொண்டிருந்தான்.



இறுதியில் அவர்கள் நீ இவ்வாறு கூறக் காரணம் என்ன? எனக் கேட்டனர். அதற்கு அவன், நான் யாரிடமிருந்து மருத்துவம் படித்தேனோ அந்த மருத்துவர் ஒரு நாள் என்னையும் அழைத்துக் கொண்டு ஒரு நோயாளியை பார்ப்பதற்காக சென்றார். மருத்துவரின் நடவடிக்கைகளை கவனமாகப் பார்த்தேன். மருத்துவர் இங்கும் அங்கும் பார்த்து விட்டு கட்டிலுக்கு கீழே விழுந்து கிடந்த கொண்டை கடலைகள் சிலவற்றை எடுத்து கையில் வைத்துக் கொண்டு அவற்றுடன் விளையாடினார். பிறகு அந்த நோயாளியிடம், நீங்கள் கொண்டைக் கடலை சாப்பிட்டதாகத் தெரிகிறதே என்றார். அவர் உண்மையில் கொண்டைக் கடலை சாப்பிட்டதை ஒப்புக் கொண்டார். இதைப் பார்த்த நான், ஒரு நோயாளியைப் பார்க்கச் சென்றால் கட்டிலுக்கு கீழே என்ன கிடக்கிறது என்று பார்க்க வேண்டும் என்று உடனே புரிந்து கொண்டேன். மேலும் படுக்கைக்கு கீழே என்ன பார்க்கிறோமோ அதைச் சாப்பிட்டே அவர் நோய்க்கு ஆளானார் என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். நான் இங்கு வந்த போது இவருடைய படுக்கைக்கு கீழே குதிரைக் கடிவாளத்தைப் பார்த்தேன். எனவே குதிரைக் கடிவாளத்தைச் சாப்பிட்டதினால் தான் இவர் நோய்க்கு ஆளாகி விட்டார் என்று நான் புரிந்து கொண்டேன் என்றார்.

***இப்போது பாருங்கள். எந்த ஒன்றை அவன் அறிவுக் கூர்மை என்று எண்ணினானோ அது அறிவுக் கூர்மையாக இருக்கவில்லை. மாறாக, உண்மையில் அது அறியாமையும் முட்டாள்தனமும் ஆகும்.***

## 22. ஞானம்

***வானங்களிலும் பூமியிலுமுள்ளவையெல்லாம் அரசனும் தூயவனும் வல்லமையுள்ளவனும் நுண்ணறிவுள்ளவனுமாகிய அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. இறைவன் செய்கிற செயல் எதிலும் எந்த ஆட்சேபனையும் செய்ய இயலாது என்பதற்கு உலகின் ஒவ்வோர் அணுவும் சாட்சியாக விளங்குகிறது. என்றாலும், மேற்போக்காகப் பார்த்தால் சில பொருள்கள் ஆட்சேபனைக்குரியதாக தென்படலாம். ஆனால் அவற்றை சிந்தித்துப் பார்த்தால் வல்லமைமிக்க அல்லாஹ்வின் ஒவ்வொரு செயலும் குறையற்றதும், ஞானம் நிரம்பியதும் என்று மனிதன் ஏற்றுக் கொள்வான்.***

எல்லாரும் நன்கறிந்த ஒரு கதை உண்டு. முல்லா அறிவைக் கொண்ட ஒருவன் ஒருமுறை தோட்டத்திற்குள் சென்றான். அதில் ஒரு மாமரத்தில் சின்னஞ்சிறிய பழங்கள் இருப்பதைக் கண்டான். ஆனால் சிறிய மெல்லிய கொடியில் பெரிய பூசணிக்காய் காய்த்திருப்பதையும் கண்டான். மக்கள், வல்லமைமிகுந்த அல்லாஹ் அறிவுமிக்கவன் என்று கூறுகிறார்கள். ஆனால் இவ்வளவு பெரிய மரத்தில் ஒரு சிறிய பழம் காணப்படுவதும், ஒரு மெல்லிய சிறிய கொடியில் இவ்வளவு பெரிய பூசணிக்காய் காணப்படுவதிலும் எந்த ஞானமும் எனக்கு தென்படவில்லை என்று அவன் கூறினான். பின்னர் அவன் ஓய்வுக்காக அந்த மாமரத்தின் கீழ் படுத்துத் தூங்கினான். தூக்கத்தில் ஒரு மாங்காய் எதிர்பாராமல் அவன் தலையில் கடுமையாக விழுந்து விட்டது. உடனே அவன் பயந்து எழுந்து



விட்டான். இறைவனே! என்னை மன்னித்து விடு. இப்போது நான் உன் ஞானத்தை அறிந்து கொண்டேன். இத்தனை உயரத்திலிருந்து பூசணிக்காய் என் தலையில் விழுந்திருந்தால் நான் மரணமடைந்திருப்பேன் என்று கூறினான்.